பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 02 சனிக்கிழமை (16.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 171

# படையினர் - புலிகள் நெருங்கி நின்று நேற்று நீண்ட நேரம் உக்கிரச் சண்டை!

## 6,000 பொதுமக்கள் இராணுவப் பகுதிக்கு வந்ததாக அறிவிப்பு

கொழும்பு, மே 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருந்த பாதுகாப்பு வலயத்திற்கு அடுத்து அமைந்துள்ள முள்ளிவாய்க்கால், கரையான் முள்ளிவாய்க்கால், வெள்ளாம்முள்ளிவாய்க்கால் பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே உக்கிர சண்டைகள் தொடர்ந்து நேற்றிரவு வரை நடைபெறுவதாக களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் 58 மற்றும் 59 ஆவது படைப்பிரிவுகளைச் சேர்ந்த படையணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் எதிரெதிர் முனைகளில் முன்னேறி வருவதாகவும், இரு படைப்பிரிவுகளும் சுமார் 2கிலோ மீற்றர் தொலைவு இடைவெளியில் இருப்பதாகவும், விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதல்களுக்கு மத்தியிலும் இரண்டு படைப் பிரிவுகளும் விரைவில் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

வெள்ளாம்முள்ளிவாய்க்கால் பகுதியில் விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் கனரக துப்பாக்கிகள் தானியங்கி துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதத் தளபாடங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாக இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

பல முனைகளில் அந்தப் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதனால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும், அங்கு இயங்கி வந்த ஒரேயொரு மருத்துவமனையாகிய முள்ளிவாய்க்கால் மருத்துவமனையும் செயலிழந்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், மே 16

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலை அறிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சூசையின் குடும்பத்தினர் கடலில் கைது என அறிவிப்பு

கொழும்பு, மே 16

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசையின் குடும்பத்தினரை, அவர்கள் தமது இரண்டு உறவினர்களோடு, படகு ஒன்றில் தப்பிச் சென்ற போது கடற்படையினர் கைது செய்திருப்பதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார். சூசையின் மனைவி சத்தியதேவி,

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நம்பியார் இன்று வருகிறார்

ஜெனிவா, மே 16

ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ - மூனின் விசேட பிரதிநிதியாக விஜய் நம்பியார் இன்று கொழும்பு போய்ச்சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் நேற்று இங்கு பயணமாவார் என்று கூறப்பட்ட போதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களில் உள்ள அகதிகளைப் பார்வையிட அனுமதி வழங்குமாறு எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, மே 16

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களை அங்கு சென்று பார்த்து அவர்களின் உண்மை நிலையை அறிவதற்கும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய நான்கு கட்சிகளும் கூட்டாக வேண்டுகோள் ஒன்றை அரசிடம் விடுத்துள்ளன.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் எஞ்சியுள்ள பொதுமக்களை 48 மணி நேரத்தில் அரசு விடுவிக்குமாம்!

### ஜோர்தானில் வைத்து ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, மே 16

வன்னியில் பாதுகாப்பு வலயத்திற்சிக்குண்டுள்ள பொதுமக்கள் 48 மணித்தியாலங்களுக்குள் விடுவிக்கப்படுவார்கள் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மேற்கோள் காட்டி அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் அனுஷா பல்பிட்ட தெரிவித்துள்ளார்.

ஜோர்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அங்குள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணி புரியும் இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றுகையில், வார இறுதிக்குள் விடுதலைப் புலிகளிடம் எஞ்சியிருக்கும் இறுதிப் பகுதிகளும் கைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக்குழு பணிகளை இடைநிறுத்தியது

கொழும்பு, மே 16

முள்ளிவாய்க்கால் பகுதியில் தொடரும் கடும் சீண்டைகள் காரணமாக மோதல் பகுதிக்கான தமது மனிதாபிமான பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்திருக்கின்றது.

மோதல் நிலைமை காரணமாக அந்தப் பகுதியில் சிக்கியுள்ள காயமடைந்தவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களுக்கு உதவ அமெ. கடற்படை தயார்!

நியுயோர்க், மே 16

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்கு அல்லது அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்குத் தயாரான நிலையில் அமெரிக்க கடற்படை உள்ளதாக அதன் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் திமோதி தெரிவித்துள்ளார்.

மூன்று மூதங்களுக்கு முன்னர் இலங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரின் பட்டினிச்சாவைத் தடுக்க விமானம் மூலம் உணவு வழங்குங்கள்!

### மத்திய அரசிடம் ஜெயலலிதா வலியுறுத்து

சென்னை, மே 16

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களை விநியோகிக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னியில் இருந்து வந்த கர்ப்பிணிகளைப் பராமரிக்க வரணியில் தாய், சேய் நிலையம்

யாழ்ப்பாணம்,மே 16

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பவதிகள் தமது பிரசவத்தின் பின்னர் விசேட பராமரிப்புக்காக யாழ். மாவட்டத்திலுள்ள தமது உறவினர்களுடன் குறிப்பிட்ட காலத்திற்கு தங்க அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நலன்புரி நிலையங்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மார் பாதுகாப்புத்தரப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ள நலன்புரி நிலையம் அமைந்துள்ள பகுதிப் பிரதேச செயலாளரூடாக அரசாங்க அதிபருக்கு நேரகாலத்துடனேயே விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு நலன்புரி நிலையத்தில் பணிபுரியும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் உதவி புரிவார்கள்.

இந்தத் தகவலை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லாத கர்ப்பவதிகளுக்கு விசேட ஏற்பாடாக வரணிப் பிரதேச வைத்தியசாலையில் பிரசவத்திற்கு பின்னரான தாய் சேய் நல பராமரிப்பு நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு தங்கவுள்ள தாய்மார், குழந்தைகளின் உணவு, மருத்துவ தேவைகளை சுகாதாரத் திணைக்களம் வழங்கும். இவர்களுக்கு தேவையான விசேட போசாக்கு உணவுகள், விசேட பராமரிப்புக்கான பொருள்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் வழங்கவுள்ளனர் - என்று அவர் தெரிவித்தார்.

# பராமரிப்பு நிலையம் திங்கள் திறப்பு

(1)

யாழ்ப்பாணம், மே 16

இடம் பெயர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களைப் பிரசவத்தின் பின்னர் பராமரிக்கவென வரணியில் அமைக்கப்பட்டுள்ள தாய் சேய் பராமரிப்பு நிலையத்தின் அங்குராப்பண வைபவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அந்த நிலையம் சர்வதேச மருத்துவ சுகாதார நிலையத்தின் அனுசரணையுடன் ஐ.நா.முகவர் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர் வைத்திய கலாநிதி என்.சிவராஜாவும் கலந்து கொள்வர்.

(1-7)

# மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தாவில் நேற்று சரஸ்வதிசிலை, நுழைவாயில் வளைவு திறப்பு

யாழ்ப்பாணம்,மே 16

மட்டுவில் சந்திபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று அமரத்துவம் அடைந்த மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி சசிகலா விஸ்வலிங்கத்தின் ஞாபகார்த்தமாக வடிவமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையும், பாடசாலையின் நுழைவாயில் வளைவும் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டன.

கல்லூரி அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் தொடக்கமாக திருமுறைகள் ஓதப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசியக் கொடி, பாடசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டன.

நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வளாகத்தில் சரஸ்வதியின் திருவுருவச் சிலையை திரை நீக்கம் செய்து வைத்த பின்னர் நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து கல்லூரியின் நூழைவாயில் வளைவினை யாழ்ப்பாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.ரி செல்வரத்தினம் நாடாவை வெட்டித் திறந்ததுடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த புதிய கதவினையும் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லையும் அவர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட விசேட அரங்கில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

முதலில் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. அரங்கில் அமரர் திருமதி சசிகலா விஸ்வலிங்கத்தின் திருவுருவப் படம் அவரது கணவரான விஸ்வலிங்கத்தினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பராமச்சாரி சுவாமிகளும், வண பிதா டானியல் றஞ்சித் ஆகியோரும் நிகழ்த்தினர் (1-131-59)

# குடும்பஸ்தர் சடலம் மீட்பு; சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,மே 16

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாக உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலீஸார் சந்தேக நபரை மல்லாகம் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)


## பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

A/L 2011

விவசாயம் பிரிவு III ஆரம்பம்
இன்று 16.05.2009
சனி - 1.00 P.m.
MR. - விக்கி
பிரிவு - 9.00A.M
பிரிவு - II 10.00A.M
புதிய பிரிவுகள் நடை பெறுகின்றன
தனிப்பா அனுமதியுண்டு
குறிப்பு: இவ் ஆசிரியரின் வகுப்புகள் எமது நிறுவனத்தில் மட்டும் தான் நடைபெறும்.


## மக்கள் நலன்காக்கும் பிரிவு கோப்பாய்

### பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

| | |
|---|---|
| காலம் | :14.06.2009 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | :காலை 9 மணி |
| இடம் | :நிறுவன மண்டபம் |
| தலைமை | :திரு. கோ.சிவசுந்தரமூர்த்தி (நிறுவனத் தலைவர்) |
| குறிப்பு | :எமது நிறுவன யாப்புவிதிக்கு அமைய பொதுச் சபைஅங்கத்தவர்கள் மட்டும் கலந்து கொள்ளவும். |

இருபாலைச் சந்தி, கோப்பாய்.

செயலாளர் திரு.தி.உமாசங்கர்
மக்கள் நலன் காக்கும் பிரிவு

## NEC யின் கண்ணீர்க் காணிக்கைகள்

எமது கல்வி நிறுவன ஆசிரியர்

A.K. றொபின்சன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **செல்வரட்ணம் பரமேஸ்வரி**

*அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு எமது கண்ணீரஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

Navalar institute
Navalar Education Center (NEC)

யாழ்ப்பாணம். இயக்குநர், ஆசிரியர், மாணவர்கள்


## விசேட விற்பனை

பிரபல எழுத்தாளர்
திரு. செங்கை ஆழியான்
அவர்களின் நாவல்கள் (மொத்தம் 35 வகை) விசேட விலைக் கழிவில் விற்பனையாகின்றன. அச்சு விலையில் 40 விலைக் கழிவு வழங்கப்படும். இச் சலுகை 16.05.2009 முதல் 31.05.2009 வரையுமே.

அன்னை புத்தகசாலை
இல- 07, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ இல 0212229881


## அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மகாசபைக் கூட்டம்

*மேற்படி கூட்டம் 23.05.2009 சனிக்கிழமை மு.ப.10மணியளவில் மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.மகாசபை உறுப்பினர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.*

செயலாளர்.

# மரண அறிவித்தல்கள்

## *வினாசித்தம்பி பூதத்தம்பி* (நாடிச்சாமி அப்பா, வாழைப்பழக்கடை)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தற்போது முல்லைத்திவில் வசித்தவருமான, வினாசித்தம்பி பூதத்தம்பி (12.05.2009) செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் , நாகேஸ்வரி, இராமச்சந்திரன்(சோதி), சர்வானந்தம், சிவனேஸ்வரி, கெங்கேஸ்வரி, காலஞ்சென்ற அருளானந்தம், ஆகியோரின் மூத்த சகோதரரும், காலஞ்சென்ற நடேசமூர்த்தி, மற்றும் கமலாதேவி, சசிதேவி, இலட்சுமிகாந்தன், நாகேந்திரன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.05.2009) செவ்வாய்க்கிழமை முல்லைத்திவில் நடைபெற்றன.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை

தகவல்
குடும்பத்தினர்.

## *செல்லத்துரை ஜெயக்குமார்*



கச்சேரியடி றக்கா வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயக்குமார் நேற்று முன்திணம் (14.05.2009) வியாழக்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் றஞ்சனாதேவியின் அன்புக் கணவரும் தர்சன், கிருஷாலினி, தனுரேகா, (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதானந்தம் (இந்தியா), புஸ்பராணி (பிரான்ஸ்), நாகேஸ்வரி, உருத்திராணி (ஜேர்மனி), பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, விஜயகுமார், உதயகுமார் (ஹொலண்ட்), றாஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் மலர், கனகம்மா, செல்வராணி, இந்திராணி, கண்ணன், ராஜரட்ணம், ஜெயராஜா, அல்லிமலர் ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2009) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## *பொன்னுத்துரை பாலச்சந்திரன்*

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலச்சந்திரன் நேற்று (15.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு பார்வதியின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம்(லண்டன்) மற்றும் பாலகிருஸ்ணன்(கொழும்பு), பாலச்சந்திரன் (கனடா), பாலசரஸ்வதி (கனடா), பாலேஸ்வரி (கனடா), பாலசுந்தரி, பாலசௌந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காந்திலதா, கிருஸ்ணதேவி, கிருஸ்ணவேணி, சங்கீதா, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியசிவம், தவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பகீரதன், பங்கையன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகணம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவளம்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## விரைவாகத் தேவை சர்வதேசப் பிரசன்னம்

இலங்கையில் ஈழத் தமிழர்கள் படும் பேரவலக் கொடூரம் சர்வதேசத்தின் கருத்தில் இப்போதுதான் எட்ட ஆரம்பித்திருக் கின்றது போலும்.

வன்னியில் மோசமடைந்து வரும் மனிதாபிமானப் பிரச்சினை குறித்து முதல் தடவையாக ஐ.நா.பாதுகாப்புச் சபை ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றது. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய சகல தரப்பினரும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அது ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

இதேவேளை, வன்னி மக்களின் நிலைமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் முதல் தடவையாகப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார். வடக்கில் மனிதாபிமானப் பேர வலம் ஒன்று உருவாகுவதைத் தவிர்க்குமாறும் யுத்த வலயத்தில் சிக்கியுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பாதுகாத்து, அவசர - அவசிய - மனிதாபிமான உதவிகள் அவர்களைச் சென்றடைய உதவுமாறும் அவர் கோரியிருக்கின்றார். அங்கு மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு உடன் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அது பேரழிவை' ஏற்படுத்த வழி வகுக் கும் என அவர் எச்சரித்திருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

ஆனால் உயிருக்கும், வாழ்வுக்கும், நீதிக்குமாகப்போராடிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு இந்த உலகப் பேரரங்கின் கோரிக்கைகளும், வேண்டுகோள்களும் மீட்சியும், பயனும் அளிக்குமா என்பதே பிரதான கேள்வியாகும்.

இலங்கை நிலைமை குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை நேரடியாகக் கவனம் செலுத்தியிருப்பது குறித்து சில தரப்புகள் சிலாகித்தாலும், இலங்கையில் ஏற்பட்டுள்ள மிகமிக மோசமான மனிதப் பேரவல நிலைமையுடன் ஒப்பிடுகையில் இவ்விடயத்தில் பாதுகாப்புச் சபையின் விரைவும், வேகமும், செயற்பாடும் போது மானவையல்ல என்றும் மறுபுறத்தில் விசனம் கூறப்படுகின்றது.

இலங்கை விவகாரம் தொடர்பான பிரச்சினை ஐ.நா. பாதுகாப் புச் சபையின் வழமையான மண்டபத்தில் கூடி ஆராயப்பட வில்லை. அதற்குப் புறம்பாகவே கூட்டம் நடைபெற்றுள்ளது. இவ் விவகாரத்திற்குப் பாதுகாப்புச் சபை முக்கியத்துவம் கொடுத்திருக்குமானால், அது பற்றிய பாதுகாப்புச் சபையின் பிரதிபலிப்பு, சபையின் தலைவர் அறிவிப்பாக வந்திருக்க வேண்டும். அதை விடுத்து வெறும் ஊடக அறிக்கையாக மட்டுமே அது முன்வைக் கப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கை கூட பட்டும் படாமலும் விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றதே தவிர, வன்னியில் மனி தப் பேரவலத்துக்குக் காரணமான தரப்பை அல்லது தரப்புகளை சரியான வழியில் வழிநடத்தும் அழுத்தத்தைக் கொடுப்பதாக அது அமையவில்லை. குறிப்பாகக் கூறுவதானால் 'ஒப்புக்குச் சப்பாணி' அறிக்கையாகவே அது அமைந்திருக்கின்றது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கொண்டு இத்தகைய அறிக்கையை வெளியிட வைத்தவர்கள் வேண்டுமானால் இலங்கை விவகாரத்தைப் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுவரச் செய் தோம் எனத் தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ளலாமே தவிர, அதனால் வன்னியில் பேரவலத்தை எதிர்நோக்கும் தமிழர்களைப் பாதுகாத்து, மீட்டு, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நீதி கிடைக்கச் செய்தோம் என்று திருப்தி கூறமுடியாது. அப்படித் திருப்திப்பட வேண்டுமானால் இதற்கு அப்பாலும் பல விடயங்களை அவர்கள் செயலில் செய்து காட்டியாக வேண்டும்.

கண்மண் தெரியாமல் மக்களைக் கொன்றொழிக்கும் கனரக ஆயுதங்களின் பாவனை முழு அளவிலும் முற்றாகவும் நிறுத்தப்படவேண்டும். அதைப் பயன்படுத்துபவர்கள் யார், அப்பாவி மக்களை மனிதக் கேடயங்களாகப் புலிகள் பயன்படுத்துகின் றனர் என்ற குற்றச்சாட்டு போன்றவை குறித்தெல்லாம் சுயாதீன மாகக் கண்டறியப்பட வேண்டும். அது மாத்திரமல்ல, இப்படி நான்கு, ஐந்து மாதத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் யுத்தக் கொடூரத்தை இழைத்தவர்கள்யார், அதுபற்றிய செய்திகளை மூடி மறைத்ததன் மூலம் பெருங் கொடூரங்களுக்குத் துணைபோன சூத்திரதாரிகள் யாவர் என் பவையெல்லாம் கண்டறியப்பட வேண்டும்.

அங்கு மேலும் மனிதப் பேரழிவு நிகழாமல் தடுப்பதற்கும் -

ஏற்கனவே பாதிப்புற்றோருக்கு அவசர மற்றும் அவசிய மனிதாபிமானத் தேவைகள், மருத்துவ உதவிகள் விரைந்து செல்வதை உறுதிப்படுத்தவும் -

இதுவரை அங்கு இழைக்கப்பட்ட - பல்லாயிரம் பேரைப் படுகொலை செய்து, குற்றுயிராக்கி, அவயவங்களை இழக்க வைத்து, நடைப்பிணமாக்கி, பெருமளவு சொத்துக்களை நாசமுறச் செய்த -மனிதப் பேரழிவுக் கொடூரங் களின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கும், அது தொடர்பான ஆதாரங்கள், சாட்சியங்கள், தகவல்கள் போன்றவை அழிக்கப்படாமல் பாதுகாக்கச் செய்வதற்கும் -

அங்கு சர்வதேச தரப்புகளின் நேரடிப் பிரசன்னமும், பங்களிப்பும் விரைந்து இடம்பெறுவது மிக மிக அத்தியாவசியமானதாகும்.

ஆள் கடத்தல், கப்பம் அறவிடல் குற்றங்களின் 'மூலம்' அல்லது அதை இயக்கும் தரப்புகள் பற்றிய இரகசியம் அம்பலமாவதைத் தடுப்பதற்கே 'என்கவுண்டர்' என்ற திரிப்புகள் வாயிலாக ஆட்கள் போட்டுத் தள்ளப்படுகின்றார்கள் என்றால் -

வன்னியில் யுத்தமுனையில் பல்லாயிரம் பேரைக் கொன்றொழித்துப் பெரும் உயிர், உடைமை நாசங்களை ஏற்படுத்திய சூத்திரதாரிகள் சர்வதேசத்தின் முன் அம்பலமாவதைத் தடுக்க எத்தகைய கொடூர அளவுக்குப் படுகொலைகள் அரங்கேறும் என் பதை ஊகிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமான விடயம் அல்ல.

எனவே, வெறும் கவலை தெரிவிக்கும் அறிக்கை ஜாலங்களை விட்டுவிட்டு, யுத்தப் பகுதியில் சர்வதேசப் பிரசன்னத்தை விரைந்து ஏற்படுத்தும் வழிவகைகளை சர்வதேச சமூகம் உடன் கவனிக்க வேண்டும்.

# இலங்கைக்கு நாணய நிதியக் கடனை வழங்க இது சரியான தருணம் அல்ல

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி தெரிவிப்பு



நியூயோர்க்,மே16

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்க இருக்கும் 1.9 பில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கான உரிய காலம் இதுவல்ல என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின் ரன் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு சரியான தீர்வு ஒன்று முன்னெடுக்கப்படும் வரை சர்வதேச நாணய நிதியக் கடன் தொகையை வழங்குவதில் அர்த்தமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்குப் பாரியளவிலான நிதி உதவியை தற்போது வழங்கக் கூடாது எனவும் இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தை உடனடியாக நிறுத்தப் பல்வேறு வழிகளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகையை வழங்குவதில் அமெரிக்கா முக்கிய பங்காற்றி வருகின்றது. அமெரிக்காவின் அனுமதியின்றி சர்வதேச நாணய நிதியம் எந்த ஒரு நாட்டுக்கும் கடன் வழங்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (50)

# உலக நாடுகளிலிருந்து இலங்கை தனிமைப்படுத்தப்பட வேண்டும்

## பிரி.நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

லண்டன், மே 16

வன்னியில் இடம்பெற்று வரும் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த உலக நாடுகளிலிருந்து இலங்கை தனிமைப்படுத்தப்பட வேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் நீல் கரார்ட் தெரிவித்துள்ளார்.

குற்றங்களுக்கு தண்டனை வழங்காது, சர்வதேச சமூகத்தை உதாசீனம் செய்யும் வகையில் இலங்கை அரசாங்கம் செயற்படும் வரையில் சர்வதேச ரீதியான அழுத்தங்கள் தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளினால் பிரயோகிக்கப்படும் காத்திரமான அழுத்தத்தின் மூலம் மட்டுமே இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் உள்ளிட்ட உயரதிகாரிகள் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்ற போதிலும், மனிதப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்த இந்த அழுத்தங்கள் போதுமானதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பொதுநலவாய நாடுகள் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்கக் கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (50)

## பாடசாலை மாணவர்களுக்கு உணவு விநியோகம்

யாழ்பாணம்,மே 16

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் இரண்டாம் தவணைக்கான உணவு விநியோகத்திற்கு வழங்கற் கட்டளைகளை பெற்றுக் கொண்ட ப.நோ.கூ. சங்கங்கள் உடன் உணவு விநியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

இன்று சனிக்கிழமை ப.நோ.கூ.சங்கங்கள் உணவுப் பொருள்களை தமக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு விநியோகித்து முடிக்குமாறும் இன்று சனிக்கிழமை உணவுப் பொருள்களைப் பெறாத பாடசாலை அதிபர்கள் தத்தமது வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக திட்டப்பணிப்பாளருக்கு அறிவிக்குமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (203-7)

# சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கிய நலன்புரி நிலையம் இன்று மூடப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 16

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நலன்புரி நிலையம் இன்று மூடப்படுகிறது.

இங்கு தங்கியிருந்த 427 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 257 பேரும் கொடிகாகம் அல்லாரை வடக்கில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையத்திற்கு இன்று வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அடுத்து ஓரிரு தினங்களில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி ஆகிய நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களை அல்லாரை வடக்கு நலன்புரி நிலையத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நலன்புரி நிலையத்தில் உள்ள மாணவர்களின் நலன்கருதி வளாகத்தில் பாடசாலை தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் வேலைகள் பூர்த்தி அடைந்ததும் ஜூன் 8ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## உற்பத்திப் பொருள்கள் அனுப்புவது தொடர்பாக இன்று கலந்துரையாடல்

குடாநாட்டு உற்பத்திப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு ஏ-9 பாதையூடாக அனுப்பி வைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.பகல் 2.30 மணிக்கு அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலுக்கு யாழ். வணிகர் கழக தலைவர், யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார் மற்றும் பெரும்பாக அலுவலர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (1-95)

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முற்பட்ட 55 இலங்கையர் இந்தோனேஷியாவில் கைது

சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்லமுயன்ற 55 இலங்கையர்கள் இந்தோனேஷியாவின் மேற்குக் கடல் பகுதியில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இந்தோனேஷியாவின் வடக்கு மாகாண கரைப்பகுதியான ஆச்சேயிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் சேதமடைந்த மரப்படகொன்றில் 55 பேரையும் மீனவர்கள் பார்த்துள்ளனர்.

மீட்கப்பட்ட 55 பேரும் இரு கிலோமீற்றர்கள் நீந்தி வந்தமையால் சோர்வடைந்து காணப்படுவதாக தெரிவித்த ஆச்சே நகன் ரயா பொலிஸ் தலைமை அதிகாரி அரிச பியான்டோ, இவர்கள் அவுஸ்திரேலியாவுக்குத் தொழில்வாய்ப்புக்காகச் செல்வதற்கு முயற்சி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இக்குழுவினர் இலங்கையை விட்டு மே மாதம் 2ஆம் திகதி புறப்பட்டுள்ளனர். மே 8 இல் மலேசியாவில் தங்கியுள்ளனர். கைதான 55 பேரும் சுமார் 25-30 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். தங்களுடன் வந்த சிலர் காணாமல் போய்விட்டதாக இந்த இலங்கையர்கள் பொலிஸாரிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

55 பேரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இவர்களது உடல் நிலை தேறி வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இடைத் தங்கல் முகாம்களில் கடமைக்கு தமிழ் பேசும் பொலிஸாரை நியமிக்க வேண்டும்

## ஐக்கிய நாடுகள் அமைப்புக் கோரிக்கை

அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள இடைத் தங்கல் நிலையங்களில் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரியுள்ளது.

நலன்புரி நிலையங்களில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிக எண்ணிக்கையில் பணியில் அமர்த்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான மக்கள் சரணடைந்துள்ள காரணத்தினால் நலன்புரி நிலையங்கிளில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவத்தினரே மேற்கொண்டு வருகின்றனர்.

எவ்வாறெனினும் நலன்புரி நிலையங்களை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது பொருத்தமற்ற செயல் என ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நலன்புரி நிலைய நிர்வாக மற்றும் பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரை ஈடுபடுத்தப்படுவதே சாலச்சிறந்த நடைமுறையாகும் என ஐ.நா. தெரிவித்துள்ளது. (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 03 | 17.05.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.இ.10.42வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | மாலை.06.17 வரை |
| சுபநேரம்: | 08.53 - 10.23 |
| ராகுகாலம்: | 04.23 - 05.53 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பம் பெற்றதாகக் கூறி பொலிஸாரால் கைதான நபர் விளக்க மறியலில்

வலி.வடக்கு, மே 16

இராணுவப் புலனாய்வாளர் எனக் கூறி மக்களிடம் கப்பம்கோரி வந்ததாகக் கூறப்படும் நபரை இரண்டு வார காலத்திற்கு விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட நபரை பொலிஸார் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் குறிப்பிட்ட நபரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட நபர் தான் இராணுவப் புலனாய்வாளர் எனக்கூறி பலரிடம் இருந்து இதுவரை 14 லட்சம் ரூபா வரை கப்பம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (203-86)

# ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் தொழில்நுட்பத்தை பாகிஸ்தானுக்கு வழங்கக் கடும் எதிர்ப்பு

## அமெ. அதிகாரிகள் தெரிவிப்பு

நியூயோர்க்,மே 16

ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொள்வதற்கான தொழில்நுட்பத்தையும், கட்டுப்பாட்டையும் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அளிப்பதற்கு, அமெரிக்க அதிகாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

இத் தொழில்நுட்பத்தையும், கட்டுப்பாட்டையும் தனக்குத் தரவேண்டுமென பாகிஸ்தான் முன்வைத்துள்ள கோரிக்கை நிராகரிக்கப்படவேண்டுமென ஒபாமா நிர்வாக அதிகாரிகள் உட்பட அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி தமது சமீபத்திய அமெரிக்க விஜயத்தின்போது, இக் கோரிக்கையை அமெரிக்க அரசிடம் விடுத்திருந்தார். அமெரிக்க அதிகாரிகள் மத்தியிலேயே, இக் கோரிக்கை பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொள்ளும் வசதி உலகிலேயே அமெரிக்காவிடம் மாத்திரந்தான் உள்ளது. அமெரிக்கா இந்த வசதியை தனக்கு நெருக்கமான தோழமை நாடுகளுக்குக் கூட இதுவரை கொடுக்கவில்லை. தோழமை நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவும் முன்வரவில்லை.

பாகிஸ்தானில் பழங்குடி இன மக்கள் வசிக்கும் வசீரிஸ்தான் பகுதிக்குள் அல்-குவைதா தீவிரவாதிகளும், தலிபான் தீவிரவாதிகளும் ஊடுருவியுள்ளார்கள். இவர்கள் அடிக்கடி ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவி, அங்கு நிலைகொண்டுள்ள கூட்டுப் படைகள் மீதும், ஆப்கான் படைகள் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு பாகிஸ்தானுக்குள் திரும்பி விடுகிறார்கள்.

இப்படி எல்லை தாண்டி தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்க இராணுவம் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் பாகிஸ்தான் பிராந்தியத்துக்குள் ஊடுருவி நிலைகொண்டுள்ள தீவிரவாதிகளின் இலக்குகள் மீதும் இவர்கள் பதுங்கியிருக்கும் வீடுகளின் மீதும் அமெரிக்கா, ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திவருகிறது.

தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் வீடுகளில் தங்கியுள்ள அப்பாவிகளும் சில வேளைகளில் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பலியாகி விடுகிறார்கள். இத்தகைய தாக்குதல்கள் பழங் குடி இன மக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றன. ஏவுகணைத் தாக்குதலுக்கு ஆரம்பத்தில் ஆட்சேபனை தெரிவித்துவந்த பாகிஸ்தான் அரசு பின்னர் அமைதியடைந்துவிட்டது.

தீவிரவாதிகள் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கி விட்டார்கள். அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்களில் அப்பாவி மக்கள் பலியாவதைத் தடுப்பதற்காகவும், தனக்கு எதிராகப் போராடி வரும் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காகவும் பாகிஸ்தான் அரசு தற்போது ஆளில்லா விமான ஏவுகணைத் தாக்குதலுக்கான தொழில்நுட்பத்தையும், கட்டுப்பாட்டையும் தன்னிடம் தருமாறு அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில், பாகிஸ்தானுடன் இணைந்தே ஆளில்லா விமானம் மூலமான ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொள்ள அமெரிக்க விரும்புகிறது. ஆளில்லா விமானங்கள் மூலமாக திரட்டப்பட்ட தகவல்களை பாகிஸ்தானுடனும் பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளது என பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்களும் நடத்தலாம். தாக்குதல் நடத்தாமல் தகவல் சேகரிப்பையும் மேற்கொள்ளலாம்.

கடந்த காலத்தில் சில முறை இப்படி ஆளில்லாத விமானங்கள் மூலம் பாகிஸ்தானுக்காக அமெரிக்கா தகவல் சேகரித்து கொடுத்தது. ஆனால், இந்த தகவல் தீவிரவாதிகளுக்குக் கசிந்ததைத் தொடர்ந்து இதை அமெரிக்கா கைவிட்டுவிட்டது.

# ஆங் சாங் சூகியிடம் விசாரணை தடுப்புக்காவலை மீறினாராம்

ரங்கூன்,மே 16

மியான்மரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஜனநாயக ஆதரவு கட்சித் தலைவி ஆங் சாங் சூகி மீது, தடுப்புக் காவலை மீறினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆங் சாங் சூகி, தாம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்து புதிய குற்றச்சாட்டையொட்டி, சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இவர் கடந்த 19 ஆண்டுகளில் பெரும் பகுதியை தடுப்புக் காவலிலேயே கழித்துள்ளார்.

இம்மாத ஆரம்பத்தில் ஜோன் எட்டாவ் என்னும் அமெரிக்கர் ஒருவர், ஏரி ஒன்றை நீந்தி, தாண்டி ஆங் சாங் சூகியின் வீட்டுக்குள் நுழைந்த சம்பவத்தையடுத்து, இப் புதிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஆங் சாங் சூகியின் சட்டத்தரணி ஹிலா மயோ மைன்ட் இது குறித்து நிருபர்களிடம் குறிப்பிடுகையில், ''அந்த அமெரிக்கரை சூகி தாமாக அழைக்கவில்லை. அவர் எதிர்பாராதவிதமாக வந்துள்ளார். எனினும், உடனடியாக அவரை வெளியேற்றவே முயற்சித்துள்ளார்'' என்றார்.

''ஜோன் எட்டாவ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். குடிவரவு, பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கேற்ப இந்த அமெரிக்கரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்'' என்றும் அவர் கூறினார்.

''தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவரால் எவருக்கும் அழைப்பு விடுக்க முடியாது. அதேவேளை, குறிப்பிட்ட அமெரிக்கருக்கும் சூகி அழைப்பு விடுக்கவில்லை. யாராவது ஒருவர் வீட்டுக் கதவடியில் நின்றால், அதற்கான பொறுப்பை மியான்மர் சட்டப்படி அவ்வீட்டுக்காரர் ஏற்க முடியாது'' என பிறிதொரு சட்டத்தரணி குறிப்பிட்டார்.

''ஏதாவது காரணங்காட்டி, ஆங் சாங் சூகியின் தடுப்புக்காவலை நீடிக்க வேண்டுமென்பதே மியான்மர் இராணுவ அரசின் விருப்பம். அதனையே புதிய நடவடிக்கை பிரதி பலிக்கிறது'' என இச் சம்பவம் குறித்து, பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண் கருத்து வெளியிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் இராணுவ அதிகாரி கொலை: லஷ்கர்-இ-தொய்பா மீது வழக்கு

இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தான் இராணுவத்தின் சிறப்பு பணிப்பிரிவின் முன்னாள் தலைவர் அமீர் பைசல் ஆல்வியை லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள்தான் சுட்டுக்கொன்றனர் என நீதிமன்றத்தில் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இக் குற்றப்பத்திரிகையில் மேலும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

பாகிஸ்தானின் பழங்குடியினர் பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை எடுத்தவர் இராணுவ மேஜர் ஜெனரல் அமீர் பைசல் ஆல்வி, இதனால் ஆத்திரமடைந்த லஷ்கர்- இ-தொய்பா தீவிரவாதிகள் அவரை தீர்த்துக்கட்டினர்.

வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு காரில் கிளம்பி அமீர் பைசலை பின்தொடர்ந்த தீவிரவாதிகள் மூவர் அவரை வழியில் மறித்து கொலை செய்தனர்.

இந்தக் கொலை சம்பவத்தில் பெஷாவரைச் சேர்ந்த முகமது நவாஸ் கான், ஒகாராவைச் சேர்ந்த அஷ்பக் அகமது ஆகியோர் உட்பட 3 தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர்.

# மற்றொரு முனையில் தலிபான்கள் மீது தாக்குதல் நடத்த பாக். இராணுவம் திட்டம்

பெஷாவர்,மே 16

பாகிஸ்தான் இராணுவம் தலிபான்களுக்கு எதிரான தாக்குதலை பிறிதொரு முனையிலும் அடுத்த மாதம் முதல் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது என பிரிட்டிஷ் பத்திரிகையான டெய்லி டெலிகிராப் தெரிவித்துள்ளது.

''ஸ்வாட் பகுதியிலும், டிர் மாவட்டத்திலும், புனர் மாவட்டத்திலும் தற்போது பாகிஸ்தான் இராணுவம் தலிபான்களுக்கு எதிராக தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இது ஒரு முனைத் தாக்குதலாகும்'' என்றும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

''வசீரிஸ்தான் பிராந்தியமே அடுத்த முனையாக இருக்கும். இப்பிராந்தியத்துக்குள் பெரிய அளவில் நுழைந்து, முழு வீச்சில் தாக்குதலை மேற்கொள்ள பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டுள்ளது. தலிபான்களின் வலுவான கோட்டையாக இப் பிராந்தியம் இருந்து வருகிறது'' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

''பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் பைதுல்லா மசூத் தெற்கு வசீரிஸ்தான் பிராந்தியத்தில்தான் பதுங்கியிருக்கிறார். அடுத்த கட்டத் தாக்குதலில், இராணுவத்தின் முதல் குறியாக பைதுல்லாவே இருப்பார்'' என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

''பாகிஸ்தான் இராணுவம் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்குவதில், உண்மையிலேயே இப்போதுதான் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. இதுவரை இடம் பெற்றுவரும் ஒரு முனைத் தாக்குதலில், 700 இற்கு மேற்பட்ட தீவிரவாதிகள் பலியாகியுள்ளார்கள்'' என்றும் டெய்லி டெலிகிராப் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மாணவர் மன அழுத்தம் போக்க பாடசாலையில் வித்தியாசமான விளையாட்டு சீனாவில் அறிமுகம்

பீஜிங், மே 16

சீனாவில் ஜினான் நகரிலுள்ள ஒரு நடுநிலைப் பள்ளி, மாணவர்களுக்கு வித்தியாசமான புதிய விளையாட்டொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆசிரியர்களின் உருவப்படங்களை ஒட்டி பந்தை உதைப்பதே அந்த விளையாட்டாகும்.

ஒரு சாக்குப் பையில் துணிகளும் பஞ்சும் அடைக்கப்படும். இது ஒரு வகையான பந்து. இதன் மீது ஒவ்வொரு ஆசிரியரினதும் உருவப்படம் ஒட்டப்படும். பின்னர் பந்தை உதைக்குமாறு ஆசிரியர்களே தூண்டுவார்கள்.

''மாணவர்களின் மன அழுத்தத்தை நீக்குவதற்காகவே இந்த உதை பந்தாட்டம். இது ஒரு வகையிலான உள ரீதியிலான சிகிச்சை ஆகும்'' என இப்பாடசாலையில் துணை முதல்வர் மெங்பான் ஷியாங் விளக்க மளிக்கிறார்.

''இரண்டும் கெட்டான் வயதிலுள்ள மாணவர்களுக்கு அதிக பிரச்சினைகள் உள்ளன. இவர்கள் சரியாகப் படிப்பதில்லை. அதனால் ஆசிரியர்களினதும், பெற்றோரினதும் கோபத்துக்கு ஆளாகின்றனர். கண்டனங்களுக்கும் தண்டனைகளுக்கும் உள்ளாகிறார்கள், இதனால் இம் மாணவர்களுக்கு மனவழுத்தம் ஏற்படுகிறது'' என்றும் அவர் கூறுகிறார்.

''இந்த மனவழுத்தத்தால் விரக்தி, எரிச்சல், ஆத்திரம், பயம், பழிவாங்கல் உணர்வு ஆகியவை ஏற்படுகின்றன. இவற்றை உள்ளத்திலிருந்து நீக்கவே, இந்தப்புதிய உதைப்பந்தாட்டம். பள்ளிக் கூட வளாகத்துக்குள்ளேயே, இந்த மன அழுத்தத்தை இந்த விளையாட்டு நீக்கிவிடும்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

''இந்த விளையாட்டை நாங்களே ஏற்பாடு செய்துள்ளோம்.எனது படம் ஒட்டிய சாக்குப் பையும் பள்ளிக் கூடத்தில் கட்டி தொங்க விடப்பட்டுள்ளது. மாணவர்கள் அதை உதைத்தாலும், அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன்'' என்றும் அவர் கூறுகிறார்.

## உலக அரங்கில்

# பாக். வடமேற்குப் பகுதியில் பாடசாலை தீயிட்டு எரிப்பு

இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியிலுள்ள தாரா ஆடம் கேஸ் நகரிலுள்ள சிறுவர் பாடசாலையொன்று தலிபான் தீவிரவாதிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பெஷாவரிலிருந்து சுமார் 30 கிலோமீற்றர் தொலைவில் இந்நகர் அமைந்துள்ளது. தீவிரவாதிகள் இப்பாடசாலை மீது குண்டுகளை வீசினார்கள். கட்டடம் தரை மட்டமானது. தீப்பிழம்புகளும், கடும் புகை மண்டலமும் எழுந்தன என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஏற்கனவே இது போன்ற தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதனால் பல பகுதிகளில் அநேக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. கடும் கோட்பாட்டு இஸ்லாமியச் சட்டத்தை நடைமுறைப்படுத்த விரும்பும் தலிபான்கள் மகளிர் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்கள் என அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

# மும்பைத் தாக்குதலில் சம்பந்தப்பட்டோரை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்குக!

## பாகிஸ்தானிடம் அமெரிக்கா வலியுறுத்து!

வாஷிங்ரன், மே 16

மும்பையில் தாக்குதலில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தர பாகிஸ்தான் அரசு கூடுதல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க அரசின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணை அமைச்சராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படும் ரொபர்ட் பிளேக், நாடாளுமன்றக் குழுவில் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

''மும்பைத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், இந்தியா - பாகிஸ்தான் உறவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும். இந்தியா - பாகிஸ்தான் இடையிலான அமைதிப் பேச்சும் மும்பைத் தாக்குதல் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் கூறினார்.

''மும்பைத் தாக்குதலில் கைது செய்யப்பட்டுள்ள 9 குற்றவாளிகள் மீது பாகிஸ்தான் அரசு வழக்குப் பதிவு செய்துள்ளது. இருந்தும் அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தருவது மிக முக்கியமானதாகும். அதேவேளையில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் மீதும் பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொறுத்தே இரு நாடுகளுக்குமிடையில் மீண்டும் ஆரோக்கியமான நல்லுறவு ஏற்படும். அமைதிப் பேச்சுகளும், இதர தொடர்புகளும் முன்னேற்றமடையும்'' என்றும் ரொபர்ட் பிளேக் குறிப்பிட்டார்.

''மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா - அமெரிக்கா இடையிலான பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான புலனாய்வில் அமெரிக்கா இந்தியாவுக்கு உதவியது. இனி வரும் காலத்திலும் இதனை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொள்ளும்'' என்றும் பிளேக் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் திருமதி சசிகலா விஸ்வலிங்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட வாணி சிலை மற்றும் நுழைவாயில் வளைவு ஆகியவற்றின் திறப்பு விழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வாணி சிலைக்குச் சமயக்கிரியைகள் இடம்பெறுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் நுழைவாயிலை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் மற்றும் மாணவர்கள், பொதுமக்களையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: வாசன், அருணன்)*





## நலன்புரி நிலையங்களுக்கு கியூடெக் உதவி

குருநகர், மே 16

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்து நெல்லியடி மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவிக்கரசர் வித்தியாலயம் ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுமார் 5 லட்சத்து 5ஆயிரம் பெறு மதியான நிவாரணப் பொருள்கள் 'கியூ டெக்' நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-51)

## தமிழ் அறிவுத் தேர்வு

மண்டுவில், மே 16

தென்மராட்சி வலயப்பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 3,4,5 மாணவர்களுக்கான தமிழ் அறிவுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை பாடசாலைகள் இரு பிரதிகளில் வழமைபோன்று சுட்டெண்களை இட்டு புதன்கிழமைக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனைக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (203-59)

## வாகனம் செலுத்தக் கூடிய அங்கவீனர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், மே 16

வாகனம் செலுத்தக் கூடிய அங்கவீனர்களுக்கு வாகன சாரதிய அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்க யாழ்.மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாரதிய அனுமதிப் பத்திரம் பெற விரும்பும் அங்கவீனர்கள் மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் அல்லது அந்தந்த பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுகளுடன் தொடர்பு கொள்ளுமாறு திணைக்கள திட்ட இணைப்பாளர் எஸ்.கிருபாகரன் அறிவித்துள்ளார். (203-207)

# உலக வங்கியின் நிதி உதவியுடனான வீட்டுத் திட்டம் 2011 டிசெம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது

## திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே16

உலக வங்கியின் நிதி உதவியுடனான வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்ற வேலைத் திட் டங்கள் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் எல்லாமாக 53 ஆயிரத்து 339 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு உலக வங்கி நிதி உதவியுடனான மீள் நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் இத்தகவலை 'உதயனுக்கு' தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வரமாறு;

வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் வடக்கு,கிழக்கில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் நிறைவுபெற வேண்டும் என்பது அத்திட்டத்தின் காலவரையறையாகும்.

உலக வங்கியின் 75 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியுடனும் இலங்கை அரசின் 2 மில்லியன் நிதி உதவியுடனும் வடக்கு, கிழக்கில் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இத்தகைய நிதி உதவியினைக் கொண்டு முப்பத்தோராயிரத்து 270 வீடுகள் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஐரோப்பிய யூனியன் 14 மில்லியன் யூரோக்களை அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியது. இதனால் மேலும் 8 ஆயிரத்து 320 வீடுகள் அமைக்கத் தீர்மானம் செய்யப்பட்டது.

இந்த அடிப்படையில் வடக்கு, கிழக்கில் எட்டு மாவட்டங்களில் 27 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணி நிறைவுபெற்றுள்ளது.

மிகுதியாக உள்ள வீடுகள் கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றில் அமைக்கப்பட வேண்டியவையாகும் தற்போது அங்கு ஏற்பட்டிருக்கும் போர் அனர்த்தம் காரணமாக அங்கு வீடுகளை அமைத்து திட்டத்தின் கால எல்லையை நிறைவு செய்ய முடியாமல் உள்ளது.

அங்குள்ள நிலையைக் கருத்திற் கொண்டு இந்த ஆண்டு ஜூன் மாதம் முடிவடையவுள்ள இத்திட்டமானது எதிர்வரும் 2011 ஆம் ஆண்டுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் இத்திட்டத்திற்கு மேலும் 43 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் வடக்கு, கிழக்கில் 53 ஆயிரத்து 339 வீடுகள் அமைக்கப்பட வேண்டும்.

வீடமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கில் வவுனியா, அம்பாறை மாவட்டங்களில் இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்கான பணிகள் அங்கு நிறுத்தப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வீடமைக்கும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (9)

## புத்தூர், வாதரவத்தைப் பிரதேசத்திற்கு குடிதண்ணீர் வழங்கத் தாங்கி அமைப்பு விநியோகம் இன்னும் ஆரம்பிக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 16

புத்தூர், வாதரவத்தை பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோகத்திற்கென பெரிய அளவிலான தாங்கி அமைக்கப்பட்டும் அதனூடாகத் தண்ணீர் வழங்கலில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

தேசிய குடிதண்ணீர் வழங்கல் அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் பத்து ஆயிரம் லீற்றர் தண்ணீர் கொள்ளக்கூடிய தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பிரதேசத்திற்கு நிலாவரையில் இருந்து குடிதண்ணீர் தினமும் இரண்டு தடவை விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த குடிதண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் தினமும் முண்டியடித்து வரு கின்றனர்.

இந்தக் குடிதண்ணீர் வழங்கலை சீராக மக்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இதற்கென மக்கள் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.மக்கள் குழுவின் மேற்பார்வையுடனேயே எதுவித சிரமமும் இன்றி விநியோகிக்கப்பட்டு வருவதாக தேசிய குடிதண்ணீர்வழங்கல் அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-224)

## காலாவதியான பால்மாவை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மே 16

திகதி காலாவதியான பால்மா விற்பனைக்கு வைத்திருந்த சாவகச்சேரி நகர வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் யாழ் பிராந்தியத்தில் உணவுகள், மருந்துகள் பரிசோதகர் த. மகாதேவன் தலைமையிலான குழுவினர் நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனை நடத்தி திகதி காலாவதியான பொருள்களை கைப்பற்றினர்.

திகதி காலாவதியான பால்மா வைத்திருந்த வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகருக்கு 10 ஆயிரம் அபராதம் விதித்து அப்ராத தொகை செலுத்த தவறின் 10 மாத சாதாரண சிறை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (1-207)

## முதலாவது மாகாண கப்போரி நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 16

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதலாவது மாகாண கப்போரி நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பெருவிழா பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். (204)

## யாழ். கரையோரப் பகுதிகளில் அபிவிருத்தி கட்டுமானப் பணிகள்

### 'நெக்டெப்' நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது

யாழ்ப்பாணம் மே 16

யாழ். கரையோரப் பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளை 'நெக்டெப்' நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது.

இந்த அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது சம்மந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ்.செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

'நெக்டெப்' நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளரும் முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபருமான எஸ். எம். குறாஸ் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள் கடற்றொழிலாளர்கள், சமாசப் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (203-224)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் பல்கலை மாணவர்களும் தங்கவைப்பு

கொழும்பு,மே 16

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து தங்கியிருக்கும் மக்கள் மத்தி யில் பல்கலைக்கழக மாணவர்களும் அடங்குவதாகத் வவுனியா அரசாங்க அதிபர் பீ.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு அகதி முகாம்களில் சிக்கித் தவிப்பதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

இவ்வாறு கல்வியைத் தொடர முடியாது அல்லலுறும் மாணவர்களை இனங்கண்டு அவர்களது கல்வியைத் தொடர அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐரோப்பிய ஒன்றிய குழுவினர் வவுனியா அகதி முகாம்களுக்கு விஜயம் செய்ததாகவும், நிலைமைகளை நே[illegible] ஆராய்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளா[illegible] (20[illegible])

## லயன்ஸ் கழக ஒன்றுகூடல் இன்று கொழும்பில்

யாழ்ப்பாணம்,மே16

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட லயன்ஸ் கழக பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும்,கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் [illegible] மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத் தலைவர்கள், பிராந்தியத் தலைவர்கள், வலயத் தலைவர்கள், இணைப்பாளர்கள் ஆகியோர் கொழும்பு சென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய இலங்கையரசின், தெளிவு ஞானமற்ற - தூரநோக்குப் பார்வையற்ற இராஜதந்திர அணுகுமுறைகள் காரணமாக சர்வதேச மட்டத்தில் அரசுக்கு ஏற்பட்டுவரும் சாதகமற்ற விளைவுகள், எதிர்காலத்தில் பெரும் பாதகங்களை ஏற்படுத்திவிடக் கூடுமென்பதை விளக்கும் வகையில் அமைகிறது இந்த ஆசிரியர் தலையங்கம். கடந்த 03 ஆம் திகதிய 'இருதின' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

# சர்வதேச மட்டத்தில் எதிர்ப்பலைகளை உருவாக்கும் இலங்கை அரசின் இராஜதந்திர அணுகுமுறைகள்!

## சுவீடன் அமைச்சரின் விஸா நிராகரிப்பு ஏற்படுத்தியிருக்கும் புதிய சிக்கல் நிலை

ஸ்ரீலங்கா என்ற இலங்கைத்தீவு சம்பந்தப்பட்ட வரையில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நிலவும் எதிர்ப்புணர்வு உச்சநிலை வரையில் சென்றுள்ளது என்பது இன்றைய அளவில் நிகழ்ந்துவரும் நிகழ்வுகள் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. இலங்கையில் இன்று வரை தீவிரமாக இடம்பெற்றுவந்த பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் மற்றும் அதன் ஒரு அம்சமாக நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த குடிமக்களை மீட்டெடுக்கும் மனிதாபிமான நடவடிக்கை என்பன சர்வதேச அழுத்தங்கள் காரணமாகத் தற்போது முடக்க நிலையில் உள்ளன என்பது கண்கூடு.

இன்றைய அரசின் பலவீனமான இராஜதந்திர அணுகுமுறையே, உலக மட்டத்தில் முன்னிலை வகிக்கும் பலவான்களான நாடுகள் முதற்கொண்டு எவரொருவராலும் கணக்கிலெடுக்கப்படாத கீழ்மட்ட நாடுகள் வரையிலும் இலங்கைக்கு அழுத்தங்களை விடுத்து வருவதற்குக் காரணமாகியுள்ளது.

**பகைத்துக் கொள்ளும் எத்தனம்**

ராஜபக்ஷ அரசானது, கடந்த காலம் முழுவதிலுமே பலதரப்பட்ட உத்திகளின் ஊடாகத் தன்னைச் சூழவும் உள்ள உலக நாடுகளைப் பகைத்துக்கொள்ளும் விதத்திலான எத்தனங்களை மேற்கொண்டு வந்திருந்தமையைக் காண முடிந்தது. இதை மேலும் அழுத்தமாகக் கூறுவதானால், இந்த அரசுடன் கைகோத்துக்கொண்டு அரச நிர்வாகத்தைக் கொண்டுசெல்லும் பல்வேறு கடும்போக்குவாத தரப்புகள் மூலம் அரசின் எதிர்காலப் பயண மார்க்கம் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு, நட்புக்கரம் நீட்டி வந்த பெருமளவு நாடுகள் எதிரிகளாக மாறிவரும் நிலைப்பாடொன்று உருவாகி வந்தது.

இலங்கையின் உள்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில் நிரந்தர நண்பர்களோ எதிரிகளோ இல்லையென்றதொரு நிலை காணப்பட்டபோதும்கூட, சர்வதேச அரங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த நிலைப்பாடானது ஒரு விதத்திலான மாறுபட்டதொரு தன்மையைப் பெறுகிறது.

**தமிழில்: சரா**

சிலவேளை, சர்வதேச மட்டத்தில் உருவாக்கிக் கொள்ளப்படும் எதிரிகள் நிரந்தர எதிரிகளாகிவிடுவதே இதிலுள்ள பயங்கரத்தன்மையாகும். ஆனால் இந்த எதிரிகள், நண்பர்கள் என்ற அணுகல் தொடர்பாக அமைதியான சிந்தையுடன் மற்றும் திறந்த மனத்துடன் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் அளவுக்கு விவேக ஞானத்துடனான அறிவு கடந்த பல தினங்களாகவே ராஜபக்ஷ அரசிடம் இருந்துள்ளது எனத் தென்படவேயில்லை.

**மக்களின் ஆசீர்வாதம்**

மேலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எப்போதுமே அரசுடன் கூடித் திரியும் தரப்புகளில் கடும் அழுத்தங்கள் காரணமாகவே பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தைத் தனது கரங்களில் எடுத்துக் கொண்டார் என்பது இரகசியம் அல்ல. அத்தோடு அக்கருமத்துக்கு நாட்டு மக்களின் ஆசீர்வாதமும் கூட குறைவின்றிக் கிடைத்தது. அரசின் அரசியல் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கிவரும் நாட்டு மக்கள் அக்கருமத்துக்கு இரு கரங்களையும் உயர்த்தி ஒத்துழைப்பு வழங்கி வந்ததோடு, இந்த அரசின் அரசியல் செயற்பாடுகளை அனுமதிக்காத எதிர்க்கட்சியின் சில தரப்பினர் கூட அதற்கு ஒத்துழைப்பு வழங்கி நின்றமைக்கு விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்தொழித்துவிடும் குறிக்கோள் அவர்களது சிந்தைகளிலும் இருந்துள்ளமையே காரணமாகும். எவ்வாறான போதிலும் இந்த யுத்தத்துக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருந்த தரப்பொன்றும் கூட இந்நாட்டில் இருந்துள்ளதைக் குறிப்பிட்டே ஆகவேண்டியுள்ளது.

**விமர்சனங்கள் தெளிவுபடுத்துகின்றன**

எவ்வாறோ, இந்த அனைத்துத் தரப்புகளுமே இலங்கைக்கு எதிராக விடுக்கப்படும் சர்வதேச தலையீடுகளுக்கு எதிரானவைகளே என்பதில் மறுபேச்சுக்கு இடமில்லை. இந்நாட்டின் பல்வேறு தரப்புகளால் அத்தகைய தலையீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் அதைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இவை அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, இன்றைய அரசின் தூரநோக்குப் பார்வையற்ற நடைமுறைகளின் காரணமாகவே, இன்றைய அளவில் வேகமானதொரு சர்வதேச தலையீட்டுக்கு இந்த நாடு முகம் கொடுக்கவேண்டி நேர்ந்துள்ளதென்பது மிகத் தெளிவானதாகும்.

எவ்வாறானபோதிலும், வேற்று நாடுகளினால் விடுக்கப்படும் முறையற்ற அழுத்தங்களுக்கும் பொய்யான கடப்பாடுகள், கோஷமெழுப்பல்களுக்கும் அடிபணிந்து வணங்கிநிற்க வேண்டியுள்ளது என்பது எச்சந்தர்ப்பத்திலும் கூட எமது அபிப்பிராயமும் அல்ல. ஆனாலும் கூட, ஒரு நாடு, தர்க்கரீதியாகக் காரண காரியமொன்றை வெளிப்படுத்தி நிற்குமேயானால், அதைக் கவனத்தில் கொள்ளாது புறமொதுக்கி விடுவதினின்றும் செயற்படும் கடப்பாடும் பொறுப்பும் எமக்குண்டு என்பதும் கூட கவனத்தில் கொள்ளப்படவேண்டியுள்ளது.

**இராஜதந்திரக் கலை**

நாம் அதற்கு இணங்கிச் செல்லாதவிடத்து அதை வெளிப்படுத்தி நிற்பதற்கான மொழியொன்றும் உலகில் நிலவுகிறது. அதுவே ராஜதந்திரக் கலை எனக் குறிப்பிடப்படுகிறது. அரசு, இந்த இராஜதந்திரக் கலையைக் கற்றுணர்ந்து பின்பற்றாமை காரணமாகவே அன்று முதல் இன்றுவரை ஒட்டுமொத்த நாடும் வினைப்பயன்களை அனுபவிக்க வேண்டி நேர்ந்துள்ளது. சர்வதேச அரசியலைக் கொண்டு செல்லும் விடயத்திலும் கூட ராஜபக்ஷ அரசு உள்நாட்டில் தாம் நடைமுறைப் படுத்திவரும் அரசியல் கலையையே பயன்படுத்திக் கொண்டுள்ளது.

அதாவது உள்நாட்டு 'பஜாரின்' 'சண்டியன்'(தாதா) என்ற கலையையே அது பயன்படுத்திக்கொண்டுள்ளது. அந்தக் கலையானது எமது நாட்டைப், பொறுத்தவரையில் பொருத்தமானதாக இருக்கக்கூடுமென்றாலும், எமது நாட்டின் எல்லைக்கு அப்பாலுள்ள அரசியலுக்குப் பொருத்தமான தொன்றல்ல என்ற தெளிவு ஞானம் ராஜபக்ஷ அரசுக்கு இருக்கவில்லை. இன்று அதன் வினைப்பயன்களை அனுபவிக்கவேண்டி நேர்ந்திருப்பது ஆட்சியாளர் மட்டுமல்ல. நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்குமேயாகும்.

**தெளிவுஞானமற்ற நிலை**

இன்றைய அளவில் இலங்கையில் நிலவும் நிலைப்பாட்டைக் கண்காணிப்பதற்காக சர்வதேசப் பிரதிநிதிகள் இலங்கைக்குப் படையெடுப்பதற்கும் இந்த தெளிவு ஞானமற்ற நிலையே காரணமாகும். இலங்கையைப் பற்றி வெளிநாட்டவர்கள் அறிக்கைகளை வெளிப்படுத்துவதற்கும் இதுவே காரணமாகும். இலங்கையரசால் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரப்பட்ட 22 ஆயிரம் கோடி ரூபாவுக்கான கடன் வழங்கப்படுவதைத் தாமதப்படுத்தி விடுவதற்கு அமெரிக்க அரசு தீர்மானம் மேற்கொண்டுள்ளமைக்கும் அதுவே காரணமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம், இலங்கை விவகாரம் தொடர்பாக உயர்மட்ட அரச அதிகாரிகளுடன் இரகசிய மந்திராலோசனை மேற்கொள்வதற்கும் அதுவே காரணமாகும்.

இந்த ஒவ்வாத நிலைப்பாட்டைத் தவிர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு அரசுக்குக் கிட்டாது போயிருக்கவில்லை. நாமும்கூட பல சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக அரசுக்குக் காரணிகளைத் தெளிவுபடுத்தியிருந்த போதிலும், அரசின் பொறுப்புவாய்ந்த தரப்புகளோ அது தொடர்பாகக் கவனம் செலுத்தக் கூடியதொரு மனோநிலையில் இருக்கவில்லை. இன்றோ வெள்ளம் அணையை உடைத்துக்கொண்டு பாய்ந்து சென்றுவிட்டுள்ளது. எனவே, அணை கட்டுவதால் எவ்வித பலனும் கிட்டப் போவதில்லை.

**சுவீடனுடன் ஏன் அரசு முறுகுகிறது?**

விசேடமாக, இந்த நிலைப்பாட்டை மிகத் தெளிவாக உணர்த்திவிட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தை அண்மையில் காண முடிந்தது. அதாவது, இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருந்த சுவீடன் நாட்டு வெளியுறவு அமைச்சரின் விஸா அனுமதியை நிராகரித்துள்ள இலங்கையரசின் நடைமுறையேயாகும். அந்த வகையில் நோக்கும்போது, சுவீடன் என்பது அன்றுதொட்டே எமது நட்பு நாடொன்றாகும்.

இது விடயத்தில், பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் மற்றும் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஆகியோருக்குப் போன்றே சுவீடனின் வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்து கண்காணிப்புகளை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியிருக்கவேண்டிய நடைமுறையை இலங்கை அரசு கடைப்பிடித்திருந்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், அவ்வாறு செயற்படாது, சுவீடன் வெளியுறவு அமைச்சருக்கான விஸா அனுமதியை மறுத்துள்ளதன் காரணமாக இலங்கை, அவசியமற்றதொரு இராஜதந்திரச் சிக்கலை வரவழைத்துக் கொண்டுள்ளதோடு, பகைமையுணர்வைக் கொண்டுள்ளதொரு அரசேயென்றதொரு முத்திரையை சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசு தனக்குத்தானே குத்திக்கொண்டுள்ளது.

**பொருள்களின் விலை அதிகரிப்பு**

இலங்கையைப் பொறுத்தவரையில், எமக்கென்று எண்ணெய் வளமோ, தங்கச் சுரங்கங்களோ, எரிவாயு வளமோ இல்லை. அதேபோன்று உணவு விடயத்தில் இது தன்னிறைவு பெற்ற நாடும் அல்ல. எனவே, நாம் சர்வதேச சமூகத்தின் தயவிலேயே வாழவேண் டியுள்ளது. மறுபுறத்தில் உலகப் பொரு ளாதாரப் பிரச்சினையின் தாக்கம் இலங்கை யிலும் உணரப்படும். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் தனித்து நின்று போராடி எழுந்து நிற்பதென்பதும் எம்மால் இயலாத கருமமாகும். அது தொடர்பாக சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் உதவி ஒத்தாசைகளும் எமக்கு மிக அவசியமானதாகும்.

எமது ஒவ்வாத பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக இன்று சமையல் எரிவாயுவின் விலைமட்டம் 238 ரூபாவால் அதிகரித்துள்ளது. கடந்த முதலாம் திகதி நள்ளிரவு முதல் சில அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள் ளன. இத்தகையதொரு பாரதூரமான - இக்கட்டுமிக்க நிலைப்பாட்டின் மத்தியில் உதவி ஒத்தாசைகள் கிட்டக் கூடிய சர்வதேச நாடுகளையும் பகைத் துக்கொண்டு நாம் இன்று பயணிப்பது எத்திசையை நோக்கி - என்பதே எம் முன் எழுந்துள்ள வினாவாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான கூடைப் பந்தாட்டத்தில் சம்பியனானது யாழ்.கன்னியர் மடம் ம.வி.

## 2ஆம் இடம்- உடுவில் மகளிர்; 3ஆம் இடம்- இராமநாதன்



யாழ்.கன்னியர் மடம் ம.வி அணி. உடுவில் மகளிர் கல்லூரி அணி. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி.
(படங்கள்: நேசன்)

வலி.வடக்கு, மே 16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும், யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை திருக்குடும்ப கன்னியர்மட அணியின் பலம் அதிகமாகக் காணப்பட்டது. முதல் பாதி ஆட்டத்தில் காட்டிய எதிர்ப்பை விட கூடிய எதிர்ப்பை உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் பாதி ஆட்டத்தில் காட்டியது.

முதலாம் பாதி ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மடம் 31:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர்மடம் 22:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் காணப்பட்டது.

ஆட்ட நிறைவில் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை 53:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வென்று மாவட்டச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும், கொக்குவில் இந்துக்கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 29:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பூப்பந்தாட்டத்தில் சம்பியன்

வலி.வடக்கு, மே16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாவட்ட சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் போட்டிகள் நடைபெற்றன.

இறுதிப் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், யாழ்.இந்து மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் நான்கு போட்டிகளில் விளையாடிய இரு அணிகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 03:01 என்ற சுற்று அடிப்படையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியை வென்று மாவட்டச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி02:00 என்ற சுற்று அடிப்படையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (50-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, மே.16

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் உதவியுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் பெண்களுக்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

* பருத்தித்துறை பிரதேச செயலகம் எதிர் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* நல்லூர் பிரதேச செயலகம் எதிர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* உடுவில் பிரதேச செயலகம் எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.
* நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலகம்.
* கரவெட்டி பிரதேச செயலகம் எதிர் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* சாவகச்சேரி பிரதேச செயலகம் எதிர் கோப்பாய் பிரதேச செயலகம்.
* யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் எதிர் வேலணை பிரதேச செயலகம்.

இரண்டாம் சுற்றில் இருந்து சங்கானை பிரதேச செயலகம் விளையாடவுள்ளது. (50-86)

* * *

யாழ்.செயலக விளையாட்டுப் பிரிவினால் வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான ஆண்களுக்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

* கரவெட்டி பிரதேச செயலகம் எதிர் பருத்தித்துறை பிரதேச செயலகம்.
* உடுவில் பிரதேச செயலகம் எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.
* காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* சங்கானை பிரதேச செயலகம் எதிர் நல்லூர் பிரதேச செயலகம். (50-86)

* * *

வண்ணை, மே.16

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் இவ்வாண்டுக்கான 7 பேர்கள் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்று சனிக்கிழமை அரியாலை ஐக்கிய கழக (காசிப்பிள்ளை) மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

'ஏ', 'பி', 'சி', 'டி' ஆகிய நான்கு பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் நான்கு குழுக்கள் மோதவுள்ளதாக யாழ்.உதைபந்தாட்ட லீக் அறிவித்துள்ளது.

இன்றைய ஆட்டத்தில் பி.ப 4 மணிக்கு 'டி' பிரிவு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதும்.

பி.ப. 5 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் பாடும் மீன் 'பி'யை எதிர்த்து பல்கலைக்கழகம் 'பி' அணி மோதும். (50-160)

## மெய்வன்மைப் போட்டி

சுழிபுரம், மே.16

கற்பகசோலை நன்மை விருத்திச் சங்க பாலர் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்க வளாக முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் பிரதம விருந்தினராகவும், வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுப்பிரமணியம், வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் திருமதி தி.சிவபாக்கியநாதன், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (204-28)

# யாழ்.பாடசாலைகளின் 17 வயதினருக்கான கிரிக்கெட்டில் 16 அணிகள் களத்தில்

வலி.வடக்கு, மே 16

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில் 15 பாடசாலைகளைச் சேர்ந்த 16 அணிகள் மோதவுள்ளன.

இப்பாடசாலைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் லீக் முறையில் இடம்பெற்று வருகின்றன.

'ஏ' குழுவில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகிய ஐந்து பாடசாலை அணிகளும்,

'பி' குழுவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியுமாக ஐந்து பாடசாலைகளும்,

'சி' பிரிவில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி, அரியாலை கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய ஆறு பாடசாலைகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவில் இருந்தும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் 'சுப்பர் சிக்ஸ்' சுற்றில் விளையாடும். அதில் முதல் இரண்டு இடங்களை பெற்றுக்கொள்ளும் அணிகள் ஏனைய மாவட்ட அணிகளுடன் மோதவுள்ளன. (50-86)

## நெல்லியடி ம.ம.வி இறுதிப்போட்டிக்குத் தெரிவு

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனம், யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் அணியானது, சென்.சாள்ஸ் பாட சாலை, இமையாணன் அ.த.க. பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரிகளுடனான போட்டிகளில் வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்குத் தெரிவாகியது. இறுதியாட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரியினை எதிர்த்து போட்டியிட வுள்ளது.

# ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பியன்



வலி.வடக்கு, மே 16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ். மாவட்ட சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் புள்ளிகளை மாறி மாறிப் பெற்ற வண்ணம் இருந்தன.

முதல்பாதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி காட்டிய எதிர்ப்பை இரண்டாம் பாதி ஆட்டத்தில் வெளிப்படுத்தவில்லை. முதல்பாதி ஆட்டம் முடிவடையும் போது யாழ்.மத்திய கல்லூரி 24:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மத்திய கல்லூரி மிகவும் வேகமாக விளையாடியது. சென்.ஜோன்ஸ் கல்லூரி புள்ளிகளைப் பெற முயன்றபோதிலும் அது கைகூடவில்லை.

ஆட்ட நிறைவில் யாழ்.மத்திய கல்லூரி 70:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வென்று யாழ்.மாவட்டச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

முதல் இரண்டு இடங்களைப் பெற்றுக் கொண்ட அணிகள் வடமாகாண மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. (50-86)

# மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கிண்ணம் வென்றது சென்.அன்ரனிஸ்

வலி.வடக்கு, மே16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி யாழ். மாவட்டச் சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாம் போட்டியில் ஏழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

முதல் ஏழு இடங்களையும் பெற்றுக் கொண்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு:

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெடுந்தீவு மகா வித்தியாலயம், கைதடி நவீல்ட் பாடசாலை, இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

இப்போட்டிகளில் தென்மராட்சி கல்வி வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கைதடி நவீல்ட் பாடசாலை அனைவரினதும் பாராட்டையும் பெற்றுக் கொண்டது. (50-86-325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி உரை நிகழ்த்துவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (131)




சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று அச்சுவேலியில் இடம்பெற்ற சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் ''இசையால் இணைவோம்'' நிகழ்வில் நிறுவன இயக்குநர் வண. பிரவீன் மகேசன் அடிகள் பரிசில் வழங்குவதையும் அருகில் கலாமினி உரிமையாளர், அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.புவனேந்திரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (160)




அல்வாய் வடமேற்கில் கிராமசேவையாளராகக் கடமையாற்றி இடம்மாற்றம் பெற்றுச்சென்ற ரி.வதனரூபனுக்கான பாராட்டு விழா அண்மையில் இளம்பிறை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டது.

சனசமூக நிலைய உறுப்பினர் த.ஜனார்த்தனன் உரையாற்றுவதையும் தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி, யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, பாராட்டுப் பெறும் கிராமசேவையாளர் ரி.வதனரூபன், புதிய கிராமசேவையாளர் அன்ரன் நிஷாந்தன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (70)



நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட மன்றத்தின் முன்னாள் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

மன்றத் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசவ், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவன இயக்குநர் .திருமதி பொன்ம[illegible] ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். [illegible]



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட சரசாலை அந்திராய்க்குளம் கையளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கிறிஸ்ரியன் எயிட் உதவி நிறுவன முகாமையாளர் செல்வி ரீஸ் டிக்கோ யுங் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும் அருகில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன், சரசாலை விவசாய சம்மேளனச் செயலாளர் திருமதி க.ஞானச்சந்திரன், பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (59)




இலங்கை வங்கியின் பொன் அரும்பு கணக்கு ஆரம்பிக்கும் நிகழ்வு கொழும்பு இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட வங்கியின் பாடசாலை சேமிப்பு பிரிவு தலைமை அலுவலக இணைப்பதிகாரி ஆர்.சுதாகரன் மாணவனுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம் நடும் விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மரக்கன்று நடுவதைப் படத்தில் காணலாம். (11)



சில்லாலை வடமத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அறிவொளிர் ஒன்றியத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கலைஞர் கௌரவிப்பு விழாவில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஆ.றெஜினோல்ட்டுக்கு ''மரபு கலைச்சுடர்'' பட்டம் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் கலந்துகொண்ட திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமார் 'மரபு கலைச்சுடருக்கு' பொன்னாடை போர்த்துவதைப் படத்தில் காணலாம். வலி.தென்மேற்குக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி [illegible] பங்குத்தந்தை அருட்திரு யூட் அமலதாஸ் அடிகளார் ஆகியோரும் படத்[illegible]கின்றனர். (130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றனவா? விசாரணை நடத்துமாறு வலியுறுத்துகிறது பிரிட்டன்

கொழும்பு, மே 16

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம் பெற்றுள்ளனவா என்பது குறித்து மிக விரைவில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனப் பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரிட்டனின் இணை வெளிவிவகார அலுவலக அமைச்சர்பில் ரம்மெல்லே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை, வருமாறு -

இலங்கையில் பொதுமக்களின் உயிரிழப்புகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு நாம் முழு ஆதரவையும் அளிப்போம். இதன் மூலம் இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதிப்படுத்த முடியும்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகளினால் மதிக்கப்படுவது சரியானதாக இருந்தால் அது எமக்கு அதிர்ச்சியளிக்கிறது.

இலங்கை ஜனநாயக நாடு என்ற ரீதியில் அதற்கு சில கடப்பாடுகள் உள்ளன - என்றார்.

இதேவேளை, பிரிட்டன் பிரதமர் ஹோடன் பிறவுண், இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறியள்ளார்.

பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் எனவும் கூறினார்.

இலங்கை நிலவரம் தொடர்பாக அடுத்த 48 மணிநேரத்தில் பிரிட்டன் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ரொம்பிறேக் எழுப்பிய கேள்விக்கே பிரதமர் ஹோடன் பிறவுண் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இலங்கை விவகாரம் குறித்து மிக விரைவில் விவாதிக்கப்படும். பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்கள் மத்தியில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமானப் பணியாளர்களை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும். விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் பொதுமக்களை விடுவிக்க வேண்டும்.

இலங்கையில் தற்போது நடைபெறுவது பாரிய மனிதாபிமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (சி)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரில் சுமார் பத்தாயிரம் பேருக்குப் போக்குளிப்பான்

கொழும்பு, மே 16

வவுனியாப் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 9,842 பேர் பொக்குளிப்பான் நோய்க்குள்ளாகியிருப்பதாக மனிதாபிமான சேவைகளுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் மக்கள் நெருக்கமாகத் தங்க வைக்கப்பட்டிருப்பதனால் இந்த நோய் பெரும் எண்ணிக்கையானவர்களுக்குப் பீடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதாரத்துறையைப் பொறுத்தமட்டில் கவலைக்கும் அதிர்ச்சிக்கும் உரிய தகவலாக இருப்பினும் இந்த நோய் பாதிப்பினால் நோயாளிகளுக்கு உயிரிழப்பு ஏற்படுவதில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிந்திய புள்ளிவிவரத் தகவல்களின்படி ஒரு லட்சத்து 97ஆயிரத்து 751 பேர் இடம் பெயர்ந்து வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 523 பேரும் யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்து 79 பேரும் திருகோணமலையில் 6,179 பேரும் மன்னார் மாவட்டத்தில் 52 பேரும் தங்க வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் உட்பட பல இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் காயமடைந்தவர்கள், நோயாளர்கள் உட்பட 1918 பேர் இருப்பதாகவும் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (அ)

## நிர்வாகிகள் தெரிவு

உடுப்பிட்டி, நாவலடி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக கொ.குணசிங்கம், உபதலைவராக த.ஈஸ்வரலிங்கம், செயலாளராக திருமதி சு.சுதாஜினிதேவி, உப செயலாளராக அ.தயானேஸ்வரன், பொருளாளராக வே.சுந்தரம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 6 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (9-253)

* * *

வலி.தெற்கு, உடுவில் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ந.சண்முகவேல் தலைவராகவும், பொ. கமலநாதன் உபதலைவராகவும், திருமதி எஸ்.கலியாண சுந்தரேசன் செயலாளராகவும், சி.நடேசு உபசெயலாளரராகவும், செ. ஆனந்தக்குமாரதாஸ் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் க.தெட்சிணாமூர்த்தி, சிறில்சுகந்தரன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தொரிவு செய்யப்பட்டனர்.

## வீதி புனரமைப்பு

பொன்னாலையிலிருந்து காரைநகர், வலந்தலை வரையான இரண்டு கிலோ மீற்றர் நீளமான பாதை இருவழிப் போக்குவரதத்துக்கான முறையில் செப்பனிடும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த வீதி ஆசிய அபிவிருத்தி நிதி உதவியுடன் 400 மில்லியன் ரூபா செலவில் வீதி அபிவிருத்தி சபையினர் செப்பனிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-28)

# கனரக ஆயுதப் பாவனைத் தவிர்ப்பு; படைத்தரப்பினருக்குப் பாரிய சேதம்

### ஊடக அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மே 16

பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள மக்களை மீட்டெடுக்கும் நோக்கில் அரச படையினர் கனரக ஆயுதத் தாக்குதலை நிறுத்தியதால் படையினருக்கு அதிக சேதம் ஏற்பட்டு வருகிறது என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களை அங்கிருந்து மீட்பதற்காக படையினர் கனரக ஆயுதத் தாக்குதலை இப்போது நிறுத்தியிருக்கின்றனர்.

வன்னி மக்களும் எமது நாட்டு மக்கள் என்பதால் அவர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படாமல் அவர்களைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்பதில் எமது படை யினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கனரக ஆயுதத் தாக்குதலை நிறுத்தியதால் படையினருக்குத்தான் அதிக சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. கனரக ஆயுதங்களால் தாக் குதல் நடத்தினால் எமது படையினர் இந்தச் சேதங்களை எதிர்கொள்ள மாட்டார்கள்.

ஆனால், பாதுகாப்பு வலயத்திலிருந்து தப்பிவரும் மக்கள் மீது புலிகள்தான் தாக்குதல் நடத்தி அவர்களைக் கொலை செய்கின்றனர். ஆனால், பழியை எமது படையினர் மீது போடுகின்றனர்.

எமது படையினர் வைத்தியசாலை மீது ஷெல் தாக்குதல் நடத்தினர் என்று வைத்தியர் ஒருவர் கூறியிருக்கின்றார். நாம் தேடிப் பார்த்தபோது அப்படியொரு வைத்தியசாலை அங்கு இல்லை.

புலிகளின் செய்திப் பரிமாற்றலை இடைமறித்துக் கேட்டபோது அவர்கள் மக்கள் மீது தாக்குதல் நடத்தியமை தெரியவந்துள்ளது.

''மக்கள் இடம்பெயர்வதைக் கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்தோம். ஆனால், அதிக எண்ணிக்கையில் இடம்பெயரத் தொடங்கினார்கள். இதனால் அவர்கள் மீது நாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம்'' - என்று புலிகள் தெரிவித்த செய்தியை எமது படையினர் இடைமறித்துக் கேட்டனர்.

ஆகவே, இடம்பெயர்ந்துவரும் மக்கள் மீது புலிகள்தான் தாக்குதல் நடத்துகின்றனர் என்பது உண்மையாகின்றது - என்றார். (சி)




யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளராகவும் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற பொ.சண்முகசுந்தரம் அவர்களின் சேவை நலன்பாராட்டு விழாவில் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் பொ.கனகசபாபதி விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

## கல்விப்பணியோடு சமூகப்பணியிலும் ஈடுபட்டு உழைத்த பெரியார்



கார்த்திகேசு இராசம்மா தம்பதியரின் மகனாக 1932.12.24 ஆம் திகதியில் பிறந்த இவர் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கார்த்திகேசு கணேசதாசன் மனிதருள் மாணிக்கமாய் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர். இவர் ஆரம்பத்தில் நுனுகலையில் உள்ள பாக்குத்தோட்டக் கணக்காளராகவும் அத்தோட்டத்தில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

1959 ஆம் ஆண்டு காரைநகர் மெய்கண்டான் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் சித்தாண்குடி இராமகிருஷ்ண த.க. பாடசாலையிலும் பணிபுரிந்து மீண்டும் நுனுகலை த.க. பாடசாலையில் ஆசிரியராகவும் அதே பாடசாலையில் உப அதிபராகவும் கடமையாற்றி அங்குள்ள மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றவர்.

நுனுகலைப்பகுதியில் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் கல்விப் பணியுடன் , சமூக, சமயப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

பின்னர் 1977களில் இடம்பெற்ற இனக்கலவரத்துக்குப் பின் மீண்டும் யாழ். திரும்பி கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம், கொழும்புத்துறை இ.ம. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் பதவியேற்று கல்விப் பணிதனை உன்னதமாக மேற்கொண்டு மகத்தான வரவேற்பைப் பெற்றவர்.

### நீத்தார் நயப்புரை

கல்விப்பணிதனை செம்மையாகவும் சமூகப் பணியினைப் பொறுப்புணர்வுடனும் மேற்கொண்டு வந்தவர். சமாதான நீதவானாகப் பதவிப் பிரமாணம் செய்து அளப்பெரும் சமூகப் பணிபுரிந்தவர்.

மருதடி விநாயகர் ஆலயத்தில் அறநெறிப்பாடசாலையை ஸ்தாபித்து அதன் அதிபராகவும் பணிபுரிந்த பெருமை அவரைச் சாரும். சமய, சமூகப் பணிகளில் அவரது தடங்கள். யாழ். சைவபரிபாலன சபையின் உறுப்பினராகவும் அகதிகள் புனர்வாழ்வுக்கழக நிர்வாக உறுப்பினராகவும் அதன் உப தலைவராகவும் தனது பணிகளை முன்னெடுத்தவர்.

இத்துடன் வலுவிழந்தோர் சேவை சங்கத்தில் இணைந்து செயலாளராகவும், உபதலைவராகவும் பொறுப்பேற்று வலுவிழந்தோர் உயர்வுக்காய் தன்னலமற்ற அளப்பெரும் சேவைதனைப் புரிந்தவர்.

சமூகஜோதி கணேசதாசன் ஒரு கல்விப்பணியாளன் என்ற தளத்தில் மட்டுமன்றி சமய, சமூகப் பணிகளை முன்னெடுத்து வருவதில் அவருக்கு நிகர் அவராகவே இருக்க முடியும். அத்தோடு சிறந்த ஆன்மீகப் பிரசாகராய் சிறந்த கவிதைகளைப் படைக்கும் கவிஞராக என பல்வேறு பரிணாமங்களில் தன்னை ஒரு மகானாக நிலைநிறுத்திக் கொண்டவர்.

இவர் வாழ்ந்த சூழலில் தனக்குரிய தனித்துவமான அடையாளங்களோடு சமூகம்சார், சமயம் சார் பணிகளை முன்னெடுப்பதில் தீவிரமாய் செயற்பட்டவர். இவருடைய இழப்பிற்குப் பின்னர் அவருடைய பணிசார் பணிகளுக்கு இன்னும் வெற்றிடம் நிரப்பப்படவில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. சமூகஜோதி கணேசதாசன் என்றும் பிரகாசிப்பார்.

கவிநேசன்.

## மக்கள் முகம்



இலங்கை மின்சார சபையின் பிரதிப்பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகத்தில் விசேட தர முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய மீசாலையைச் சேர்ந்த தம்பித்துரை நவரட்ணவேல் இவ் அலுவலகத்தின் கணக்கியல் உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றமையையடுத்து கடந்த நான்காம் திகதி தொடக்கம் இப்பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றியவர்களில் இவர் ஒருவரே சித்திபெற்றமை குறிப்பிடத்தக்கது. (207)

★ ★ ★ ★ ★ ★ ★

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் மருந்தாளராக திருமதிவிமலாதேவி ஜெகநாதன் (மருந்தாளர் வகுப்பு-I )நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் மருந்தாளராகக் கடமையாற்றியவராவார். வடமாகாணசுகாதார அமைச்சுச் செயலாளரால் இப்பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-51)

★ ★ ★ ★ ★ ★ ★

குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய அதிபராக வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிய சி. தில்லைநாதன் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையின் அதிபராகப் பணியாற்றிய மா.நவநீதமணி வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ளார். கல்லூரி அதிபராக முன்னர் கடமையாற்றிய எம்.குட்டித்தம்பி அதிபர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (236)

★ ★ ★ ★ ★ ★ ★

காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய எஸ். பரமேஸ்வரன் அளவெட்டி பொதுச் சுகாதார பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர் ஜி.கருணாநிதி தற்போது காரைநகர் பிரதேசபொதுச் சுகாதார பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (9- 250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை நடத்திய விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் உரையாற்றுவதையும், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி எலினர் அக்மொன் சேசர் ஆகியோர் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம்.
(படங்கள்:லக்ஸ்மன்)

# தேசிய இளைஞர் சேவை விருதுப் போட்டியின் வெற்றியாளர்களின் விவரம் வெளியானது

நல்லூர், மே 16

கடந்தவாரம் நடைபெற்ற தேசிய இளைஞர் விருது வழங்கும் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

சிறுகதை-எலிஸ் ஏஞ்சல்ஸ்-குருநகர், கே.சேந்தன்-இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம், எம்.மதுரா-அல்வாய் வடக்கு, அல்வாய்.

*பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-* சி.சிவகஜீபன், பி.சே.திலக்மிலன்-யாழ். மத்திய கல்லூரி.

கவிதை-கே.சேந்தன்-இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம், ஏ.சதீஸ்வரன்- தெல்லிப்பழை கிழக்கு, எஸ்.ஜதுசன்- உடுவில் கிழக்கு,சுன்னாகம்,

*பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-* ஆ.கனிமொழி-உரும்பிராய் கிழக்கு, அ.ஜெரி ஜோன்ஸன்-குருநகர்.

கட்டுரை-வி.அகிலன்-அளவெட்டி வடக்கு, ஆர்.பிரணவன்-புலவனார் வீதி, கல்வியங்காடு, என்.கார்த்திகா-கண்டி வீதி,யாழ்ப்பாணம்.

*பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-* இ.வினு-சிவன் பண்ணை வீதி,யாழ்ப்பாணம், ந.நந்தகோபன்- மட்டுவில் வடக்கு.

பாடல் இயற்றுதல்-தெ.சந்திரகுமார்-மானிப்பாய் றோட்,யாழ்ப்பாணம், அ.சத்தியன்- ஏழாலை மத்தி, அ.ஜெரி ஜோன்ஸன்-குருநகர்.

*பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-* ஜே.றுபின்சலா-புதுவீதி,கொய்யாத் தோட்டம், சி.அஜந்தன்- நவாலி,மானிப்பாய்.

அறிவிப்பாளர்-எஸ்.நிகேஸ்-அராலி தெற்கு,வட்டுக்கோட்டை, தெ.சந்திரகுமார்-மானிப்பாய் றோட்,யாழ்ப்பாணம், ரி.விதுர்சன்-கொக்குவில் கிழக்கு.

கிராமிய பாடல்-ரி.திவ்வியாஞ்சலி-மணல் தறை லேன்,கந்தர்மடம், எஸ்.விருசன்-நொத்தாரிஸ் லேன்,அரியாலை, வை.காண்டீபன் ஏ.வி றோட்,அரியாலை.

இளம் பாடகர்-ரி.திவ்வியாஞ்சலி-மணல்தறை லேன்,கந்தர்மடம், எஸ். விருசன்-நொத்தாரிஸ் லேன்,அரியாலை, கே.துவாரகன்-வரணி வடக்கு,வரணி.

தவில்-எஸ்.செந்தில்நாதன்-சட்டநாதர் றோட், நல்லூர், எஸ்.சரவணன்-கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம், ரி.ரமேஸ்- கலாசாலை வீதி, திருநெல்வேலி.

வயலின்-ஆ.பிரவீணா-காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம், வை. காண்டீபன்-ஏ.வி.றோட், அரியாலை, பி.காயத்திரி-கே.கே.எஸ்.றோட், யாழ்பாணம்.

செக்ஸபோன்- வை.காண்டீபன்-ஏ.வி றோட், அரியாலை, வை.நவரூபன்- ஏ.வி றோட், அரியாலை, ஜி.பவித்திரன்-தாவடி தெற்கு, கொக்குவில்.

ஓகன்- என்.அனோஜ் கிளமென்ஸன்-அடப்பன் வீதி, யாழ்ப்பாணம், தூ.ரேணுகா-திருமகள் வீதி, அரியாலை, ம.சிவரோசன்-சிவன் கோவில் வீதி, சித்தன்கேணி.

*பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்-* ஜெ.ஐங்கரன்-வட்டு தெற்கு.

மௌன நடிப்பு- எஸ்.நிசாந்-சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, தெ.சந்திரகுமார் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், தெ.சேந்தா-ஈச்சமோட்டை, எல்.சகாயதாஸ்-சுன்னாகம்.

பரத நாட்டியம்- பி.ஜவர்ணா- மஞ்சத்தடி, இணுவில், கே.பவன்-அங்கலிப்பாய், இணுவில், எஸ்.சபேசன்-ஓடை லேன், வண்ணார்பண்ணை, எஸ்.நிரஞ்சலா- இணுவில் தெற்கு.

கிராமிய நடனம்- ரி.வாகீசன் குழு-கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

சித்திரம்- ஏ.ஜெயந்தினி-துர்க்கா மகளிர் இல்லம், தெல்லிப்பழை, ரி.பிரதீஸ் கண்ணா-கந்தர்மடம், யாழ்ப்பாணம், எம்.கலாறஞ்சினி-இணுவில் மேற்கு.

சிற்பம்- எம்.அபிராம்-வதிரி கரவெட்டி, வை.காகுந்தன்- வட்டக்குளம், கட்டைப்பிராய், பி.கோபிநாதன்-இளவாலை.

(203-111)

## யாழ்.மாவட்ட கூ.சபையின் 20 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 20 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இவ்விழா இடம்பெறும்.

(203-224)

**வீடு, காணி விற்பனைக்கு**

உடுவில் வீதி, 2 ஆம் ஒழுங்கை,
மானிப்பாயில் நல்ல சுற்றாடலில்
அமைந்த புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொ.பே:- 0779849855

**டிஜிற்றல் பிறின்ட்**

90 ரூபாயில் இருந்து



★ இல-212,கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
★ இல-40,பிரவினா வீதி, நத்மலானை.
T.P -0718270396, 0777110610, 0212229607

## இடம்பெயர்ந்துள்ள வவுனியா வளாக மாணவர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் கடந்த ஆண்டுகளில் கற்கை நெறிகளில் பதிவுகளை மேற்கொண்டு, தற்போது இடம்பெயர்ந்து கல்வியைத் தொடர முடியாமல் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள வவுனியா வளாக மாணவர்கள் தமது விவரங்களை சம்பந்தப்பட்ட பீடாதிபதிகளுக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் 2009/2010 ஆம் ஆண்டுகளில் கல்வியைத் தொடர விரும்பின் தற்போதைய முகவரியுடன் ஏனைய விவரங்களையும் உள்ளடக்கி வேண்டுகோள்களைச் சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(204)

**மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை**
ஸ்தாபிதம் 1848

**மானிப்பாய் வர்த்தக சங்கத்தினரின் அன்பளிப்பு**

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையின் (மிஷன் வைத்தியசாலை) மருத்துவ சேவைகளை விஸ்தரிக்கும் முகமாக மானிப்பாய் வர்த்தக சங்கத்தினரால் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு கண் சிகிச்சை உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

தென்னிந்திய திருச்சபையின் (அமெரிக்கன் இலங்கை மிஷன்) சார்பில் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைச் சமூகம் இவ்வன்பளிப்பையொட்டி மானிப்பாய் வர்த்தக சங்கத்திற்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கின்றது.

*Green Memorial Hospital, Manipay.*
*AND*
*McLeod Hospital, Inuvil.* 85327

மருத்துவ மேலதிகாரி.
Medical Superintendent.

*விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும் காலங்களில்*

## மாணவர்கள் இழந்த கல்வியைப் பெறுவதற்கு விசேட வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்

### வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வலி வடக்கு மே 16

மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும் காலங்களில் இழந்த கல்வியைப் பெற பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விசேட வகுப்புக்களை நடத்த வேண்டும்.

மேற்கண்டவாறு வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளரும் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுக் குழுத் தலைவருமான பா. விக்கினேஸ்வரன் குறிப்பிட்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளைத் தொடர்ந்து உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாணவர்கள் விளையாட்டுடன் மட்டும் நின்று விடக்கூடாது. தமது பாடசாலைக் கல்வியிலும் கவனம் எடுத்து முன்னுக்கு வரவேண்டும். மைதானத்தில் திறமையை வெளிக்காட்டி நிற்கும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பதிலும் கூட கஷ்டம் இருக்க முடியாது.

இன்று விளையாட்டுத்துறை கூட உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்கு புள்ளிகளை பெற்றுக்கொடுப்பதுடன் தொழில் வாய்ப்புக்களுக்கும் கூட முன்னுரிமை அளித்து நிற்கின்றது.

இம்முறை விளையாட்டுப் போட்டிகளை மிகவும் அமைதியான முறையில் நடத்தி முடிக்க வேண்டிய நிலைமையாலேயே அமைதியான முறையில் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வம் காட்டிய மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது கல்வியிலும் ஆர்வம் காட்ட வேண்டும். இதற்கு அனைவரும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்-எனவும் குறிப்பிட்டார்.

(203-86)

## காணி அன்பளிப்பு


நவாலி, மே 16

மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் சங்கம் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் இரண்டு பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து அன்பளிப்பாகக் கல்லூரிக்கு வழங்கியுள்ளது.

இந்தக் காணியில் நவீன முறையில் ஆய்வுகூடமொன்று அமைக்கப்பட்டு வருகிறது.

(204-100)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி

கடந்த (02.04.2009) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (16.05.2009) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] தெற்கு, கொடிகாமம். (சி/558552) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகர் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். மூதறிஞர் 'சிற்பி' சரவணபவன் உரையாற்றுவதையும் தெல்லிப்பழை துர்க்காதேவி மகளிர் இல்லச் சிறார்கள் யோகர் சுவாமிகளின் கீர்த்தனைகள் இசைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கதிரவேல்)

## பஸ்தரிப்பு நிலையம் படையினரால் புனரமைப்பு

வண்ணை,மே16

யாழ்.பிரதான வீதி, புனித யாகப்பர் ஆலயத்திற்கு எதிராகத் தற்காலிகமாக இருந்து வந்த பஸ்தரிப்பு நிலையத்தைச் சின்னக்கடை படையினர் புனரமைத்து வழங்கியுள்ளனர்.

கடந்த வெசாக் தினத்தை முன்னிட்டுப் படையினரால் புனரமைக்கப்பட்டு வந்த மேற்படி பஸ்தரிப்பு நிலையம் வெசாக்கிற்கு முன்னதாகவே மக்கள் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டது. (203-160)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தொலைபேசிகளுக்கான கட்டணங்கள் நிலுவையின்றி அறவிடப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் தொலைபேசிக்கான கட்டணங்களை மாதாந்தம் நிலுவை இன்றி அறவிடும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

மாதாந்தம் ஆயிரத்தி 500 ரூபாவுக்கு மேல் நிலுவை இருந்தால் தொலைபேசி இணைப்புக்களைத் துண்டிக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர் என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிக நிலுவைகளைச் செலுத்தாத தொலைபேசி இணைப்புக்கள் இவ்வாறு துண்டிக்கப்படலாம் என்ற பீதியால் மக்கள் தமது மாதாந்தக் கட்டணங்கள், நிலுவைகள் போன்றவற்றைச் செலுத்துவதில் முண்டியடித்து வருகின்றனர். (203-224)

## யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் சாலையில் பஸ் சேவை சீரில்லை; பயணிகள் சிரமம்

நல்லூர்,மே16

யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் சாலையில் சேவையிலுள்ள இ.போ.ச. பஸ்வண்டிகள் குறிக்கப்பட்ட நேரங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை.

இதனால் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகள் உரிய நேரங்களில் தமது இடங்களுக்குச் செல்லமுடியாதிருப்பதாகவும் பயணிகள் கூறுகிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து புறப்படவேண்டிய பஸ்வண்டி சேவையில் இல்லாமையால் நெடுந்தீவு, நயினாதீவுக்கான படகுப் பயணிகள் சுமார் 2 மணி நேரம் வரை குறிகாட்டுவான் துறைமுகத்தில் தரித்து நின்று 4 மணிக்கே யாழ்.நகர் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேசமயம் அன்றையதினம் காலை யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து குறிகாட்டுவானுக்குச் செல்லவேண்டிய பஸ் நீண்டநேர தாமதத்திற்குப் பின்னரே தனது பிரயாணத்தை ஆரம்பித்தது.

இந்த வழித்தடத்தில் நெடுந்தீவு, நயினாதீவுக்காகச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பெருந்தொகையானோர் அன்றையதினம் தாமதமாகவே தமது கடமைகளுக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டது.

அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் பயணிகள் தம்மைப் பதிவுசெய்து கொள்ள வேண்டியநிலை இருப்பதால் அங்கும் அவர்கள் தாமதிக்கவேண்டியுள்ளது.

இந்நிலையில் பஸ்கள் உரிய நேரத்தில் புறப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (203-111)

## 'கொக்கூர்ச் சுட்டி' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,மே16

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் கிளை நூலகத்தின் ஏற்பாட்டில் 'கொக்கூர்ச் சுட்டி' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை. 9.30 மணிக்கு நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் சாந்தசீலன் தலைமையில் கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நூலக வாரத்தை முன்னிட்டு நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற நூலகர் ரோகினி பரராசசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அன்றைய தினம் பாடசாலை மாணவர்களின் பேச்சு, கவியரங்கம், கலை நிகழ்வுகள் என்பவற்றுடன் ''மாணவர் கண்ணோட்டத்தில் முதன்மை வகிப்பது தொலைக்காட்சியா? நூலகமா?''என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (204-120)

## நூலக வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே16

கைதடி பொதுநூலக ஆலோசனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தேசிய நூலக வார நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனைப் பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

* * *

நவாலி,மே16

தேசிய நூலக வாரத்தையொட்டி அதன் முதல்நாள் நிகழ்வுகள் ஆனைக்கோட்டை கிராம உப அலுவலக நூலக மண்டபத்தில் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சேகரிக்கப்பட்ட நூல்களின் ஒரு பகுதியினையும், மரக்கன்றுகளையும் ஓய்வுபெற்ற மலேரியாத் தடுப்பு அதிகாரி வே.மண்டலேஸ்வரம் செயலாளரிடம் கையளித்தார். இதனைத் தொடர்ந்து புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது. (204-100)

* * *

மண்டுவில்,மே16

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தினால் நூலக வாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் மாணவர்கள், வாசகர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படுவதுடன், நூலகம் சம்பந்தமான விழிப்புணர்வும் மக்களிடையே ஏற்படுத்தப்படவுள்ளன. (204-59)

## கைதடி முதியோர் இல்லத்தில் அதிகரித்துள்ள இலையானைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினரிடம் நிர்வாகம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே16

கைதடி அரச முதியோர் இல்லத்தில் அதிகரித்துக் காணப்படும் இலையான்களைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரப் பகுதியினர் முன்வரவேண்டும் என்று முதியோர் இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:

இந்த முதியோர் இல்லத்தில் இதுவரை காலமும் இல்லாத வகையில் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதிகரித்துக் காணப்படும் இலையான்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதற்கான கிருமிநாசினிகளுக்குத் தட்டுப்பாடு நிலவு கின்றது.

ஆகையினால் சுகாதாரப் பகுதியினர் இலையான்களைக் கட்டுப்படுத்த உதவுமாறும் இல்ல அத்தியட்சகர் கேட்டுள்ளார். (203-224)

## இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,மே16

இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழாவும் 2006 - 2007 ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவும் நாளை 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நல்லை ஞானசம்பந்த ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

எழுத்தாளர் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை அரியாலையூர் சி.சிவதாசனும் ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சார்ய சுவாமிகள், அருட்தந்தை சு.ஜெபநேசன் ஆகியோரும் வாழ்த்துரையினைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

பிரதம விருந்தினராக யாழ்.ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தலைவர் ப.கிரிதரனும், சிறப்பு விருந்தினர்களாகக் கட்டைவேலி ப.நோ.கூட்டுறவுச்சங்க முகாமையாளர் த.சிதம்பரப்பிள்ளை, அரியாலை ப.தெ.வ. அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க முகாமையாளர் ச.புஸ்பராசா, நல்லூர் பிரதேசசெயலக சமுர்த்தி தலைமைத்துவ முகாமையாளர் த.சந்திரகாசன், கோண்டாவில் ப.தெ.வ. அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் பொ.யேசுராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பரிசளிப்பு உரையினை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தவுள்ளார். இலக்கியப்பேரவையால் சிறந்த நூல்களுக்கான பரிசில்கள் வழங்கல், கனக செந்திகதா விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டுரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்த முதற்பிரதியினை அ.த.கிருஷ்ணசாமி பெற்றுக் கொள்ளவுள்ளார்.

''நாவேந்தன் விருது'' வழங்கலுக்கான பரிசளிப்பு உரையினை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். (9- 236)

## சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு

கோப்பாய்,மே16

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி முத்திரை பெறும் குடும்பங்களில் வீட்டு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பில் 2 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் தெற்கு - கணபதி இராசன், புத்தூர் கிழக்கு - கந்தையா தவமணி ஆகியோரே இச்சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (203-72)

## தபால்மா அதிபர் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகை தருவார்

யாழ்ப்பாணம்,மே16

தபால்மா அதிபர் எம்.கே.பீ.திஷாநாயக்கா அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார் எனத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு பிரதம தபால் திணைக்களத்தின் உயரதிகாரிகளைக் கொண்ட குழுவினருடன் வருகை தரும் தபால்மா அதிபதி வடபகுதி தபால் சேவையை மேம்படுத்துவது சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்.பிரதம தபாலகத்தில் ஆரம்பிக்கப் படவிருக்கும் அஞ்சல் பயிற்சிக் கல்லூரியையும் தபால்மா அதிபதி திறந்துவைப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (203-224)



கரவெட்டிப் பிரதேசத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் அனுசரணையுடன் தையல், தொழிற்பயிற்சி நெறிகள் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன. பயிற்சி ஆசிரியர் [illegible] மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து அழைத்துவரப்பட்டவர்களின் நிலைமைகள் குறித்து அரசு அசமந்தப் போக்கு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கண்டனம்

கொழும்பு, மே 16

"வன்னியில் இருந்து வவுனியா கொண்டுவரப்பட்ட மக்களை அரசு தனது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றது. 24 மணிநேரமும் முப்படைகளதும் குண்டு வீச்சுக்களுக்கு மத்தியில் தமது உடன்பிறப்புக்களையும், கணவன், மனைவி, உறவினர்களையும் இழந்து, உணவுப் பொருள்கள் இல்லாமல் பஞ்சத்துக்குள் வாழ்ந்த மக்களைச் சொர்க்கத்தைக் காட்டுகின்றோம் என்று அழைத்து வந்த அரசு இன்று உருப்படியான எந்தவித உதவியும் இன்றி அவர்களைத் தவிக்க விட்டுள்ளது''

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு :-

இராணுவ நிர்வாகத்திற்குள் உள்ள இம்மக்களின் தேவைகளை ஒருங்கிணைப்பது அநுராதபுரம், கண்டி, பொலனறுவையைச் சார்ந்த சிங்கள அரச அதிபர்களே. கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களுக்கு எந்த வேலைகளும் கிடையாது என்பதுடன், வவுனியா அரச அதிபருக்கும் அகதி மக்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கும் அதிகாரம் எதுவும் இருக்கின்றது எனத் தோன்றவில்லை.

முழு ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இம்மக்களில் நாளாந்தம் எத்தனை பேர் கடத்தப்படுகின்றனர், காணாமல் போகின்றார்கள் என்பதே தெரியாது. அப்படியான சம்பவங்களை முறைப்பாடு செய்யவும் முடியாத துர்ப்பாக்கிய சூழ்நிலைகளிலேயே அம்மக்கள் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களைச் சென்று பார்க்கவும், இவர்களது அவலங்களை வெளிக்கொணர்ந்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அரசு எல்லோரது கோரிக்கைகளையும் நிராகரித்தது. சுரேஷ் பிரேமச்சந்திரன், சந்திரநேரு போன்றவர்கள் வவுனியாவில் இருக்கக்கூடிய அகதி மக்களைப் பார்த்து வர கொழும்பிலிருந்து மதவாச்சி வரை சென்றபொழுதும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பின்னர் புதுக்குடியிருப்பில் இருந்து திருகோணமலை தள வைத்தியசாலைக்கு 450 இற்கு மேற்பட்ட காயமடைந்த மக்கள் கொண்டுவரப்பட்டபொழுது அவர்களைப் பார்த்து ஆறுதல் சொல்ல திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் முயற்சித்தபோது பாதுகாப்புச் செயலாளர் தமது கொள்கை முடிவின்படி அம்மக்களைச் சென்று பார்க்க முடியாது என அனுமதி மறுத்தனர். அத்துடன் தனது முடிவை ஜனாதிபதியும் மாற்ற முடியாது எனவும் கூறினர்.

ஸ்ரீகாந்தாவும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் முகாம்களுக்குச் சென்று தம்மைத் தெரிவு செய்த மக்களைச் சந்திக்க அனுமதி கேட்டு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தபோது அதுவும் நிராகரிக்கப்பட்டது. அதன் பின்னர் மாவை சேனாதிராசா யாழ். மாவட்டத்தில் வந்திருக்கக்கூடிய இடம்பெயர்ந்த மக்களைப் பார்க்கக் கோரியபோது அவருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெயர்ந்த தனது மக்களைச் சந்திக்கவோ அல்லது யுத்த சக்திக்குள் அகப்பட்டிருக்கும் தனது மக்களைச் சந்திக்கவோ அரசு அனுமதியளிக்காமல் முற்று முழுதாக மறுத்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இரு முறை சந்திக்கத் தான் அழைத்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரைச் சந்திக்க மறுத்துவிட்டது என ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களுக்குக் கூறுகின்றார். ஆனால் எமது மக்களை நாம் போய் பார்க்க இதுவரை அனுமதிஅளிக்கவில்லை என்பதை ஏன் மூடிமறைக்க வேண்டும். அதனையும் அவர்களிடம் சொல்லி இருக்கலாமே.

இந்த யுத்தத்தில் முழு நிலத்தையும் கைப்பற்றி, பிரபாகரனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்ததாகக் காட்டிக்கொண்டால் மாத்திரமே எதிர்வரும் தேர்தல்களில் வெல்ல முடியும் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு. இதன் மூலம்தான் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த முடியும் எனவும் அவர் நம்புகின்றார்.

ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்று குவித்து, அவர்களை அங்கவீனர்களாக்கி, அவர்களது சொத்துக்களை அழித்து, இருப்பிடங்களில் இருந்து அவர்களை விரட்டி அடித்து, வரிசையில் நின்று தட்டேந்தும் சூழ்நிலையை உருவாக்கிய பின்னர் சிங்கள மக்கள் உணவு சேகரித்துக் கொடுக்கின்றனர் என்றும், உடுபுடைவை சேகரித்துக் கொடுக்கின்றனர் என்றும் விளம்பரம் செய்தவுடன் இன ஒற்றுமை வந்துவிடாது. மாறாக இனக்குரோதம் இன்னும் வளர்ச்சியடையும். ஒருபக்கம் பிணங்கள் மலைபோல் குவிய மறுபக்கம் இன ஒற்றுமையைப் பற்றிப் பேசுவது கேலித்தனமாக இருக்குமேதவிர அதில் உண்மை இருக்காது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றை நிறுத்திப் பேச முயற்சித்த ஒவ்வொரு தடவையும் அரசு அதனை நிராகரித்துள்ளது.

இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(சி)


Diploma in Hardware Engineering
ஒருவாரகால முழுநேர கற்கைநெறி
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை, பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு, மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப் பெற.....
உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி.
◈ Assembling ◈ Upgrading ◈ Troubleshooting ◈ Fault Finding
◈ Repairing ◈ Servicing ◈ Software Installation
◈ Configuring Networking Ect.....
வகுப்புக்கள் ஆரம்பம் : 18/05/2009 - 09AM
COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250


## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 09 . 11 . 1920

ஆண்டவனின் அடியில் 09 . 05 . 1988

### அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர் (பத்தர்)

திதி: 16.05.2009

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!
தெய்வமாகிய உங்களின் இந்நினைவு நாளில்
நாங்கள் இதயம் நெகிழ்ந்து கண்ணீர் மலர்தூவி
ஆண்டவன் திருப்பாதங்களை வணங்குகின்றோம்.

மஞ்சவனப் பதி வீதி,
கொக்குவில் மேற்கு.
(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தீவக வலய மட்டக் கோலப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 16

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டக்கோலப் போட்டிகள் எதிர் வரும் புதன்கிழமை வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு தீவக வலயத்தில் வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களிலிருந்து முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களையும், நெடுந்தீவு கோட்டத்திலிருந்து முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களையும் வலயமட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள அதிபர்கள் அனுப்பிவைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-204-267)


உடன் விற்பனைக்கு
புதிய தரத்திலான (Penteam P4) கணனியும் ஆங்கில தட்டச்சு இயந்திரம் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
114/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 077 1276066

மருந்தாளர் தேவை
நெல்லியடியிலுள்ள மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் அல்லது மருந்து விற்பனையில் அனுபவமுள்ளவர் தேவை.
தொடர்பு: 0774656428
(65334)

கார் விற்பனைக்கு
நிஷான் சொனி (Nissan Sony) சில்வர் கலர் 300-XXXX (FB14) தொடரிலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு பிற்பகல் 3 மணிக்குப் பின்னர்.
தொ.பே.இல.: 021-222 8984,
077 3747 825

காணி விற்பனைக்கு
வீடு கட்டுவதற்கு, அல்லது தோட்டம் செய்வதற்குப் பொருத்தமான 8 பரப்புக்காணி றோட் ஓரத்தில் அச்செழு, போயிட்டியில் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளவும்:
வே. தனேஸ்வரன்
தொலைபேசி இலக்கம்: 0602211006
(சி/558585)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 30 . 09 . 1970

விண்ணில் 17 . 04 . 2009

### செல்வி மலர்விழி பரராசசேகரம்

ஆற்றொணாத் துயருடன் மாதமொன்று
ஓடி மறைந்தபோதும் எம் இதயத்தில்
என்றும் நீ எங்களுடன் இருக்கின்றாய்
பிறப்பு, இறப்பு வாழ்வின் நியதி
என்றாலும் எம் நெஞ்சம்
பொறுக்குதில்லையே உம் பிரிவை
உன் ஆத்மாவிற்கு சொர்க்கம் நிச்சயமே!

இயங்கராவூர்,
பூவரசன்குளம்,
வவுனியா.

(சி/558588)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் செல்வநாயகம்



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் செல்வநாயகம் நேற்று(15.05.2009)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பன்னாலை சுப்பிரமணியம் -செல்லம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் உமாராணி(லண்டன்), உஷா (லண்டன்), கௌரி (ஆசிரியை, யாழ்.உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலை), தாரணி(ஜேர்மனி), சுகந்தினி (ஆசிரியை, யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும் உதயகுமார், சண்முகேஸ்வரன், சயந்தராஜன், நித்தியானந்தன், மதியழகன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதப்பிள்ளை, பாக்கியம், தணிகாசலம் ஆகியோரின் சகோதரியும் யாமினி, சரணியா, மிராஜா, வைஷகி, துவாரகி, வீஷ்வன், பிரவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.05.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலை நிறுத்துமாறு இலங்கையை ஒபாமா எச்சரித்தமை ஆறுதலளிக்கிறது

## டாக்டர் ராமதாஸ் அறிக்கை



சென்னை, மே 16

குண்டுவீச்சுத் தாக்குதலை உடனே நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இலங்கையை எச்சரித்திருக்கின்றமை மிகுந்த ஆறுதல் அளிக்கிறது - என்று பா.ம.கவின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நாள்தோறும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு வருவதற்கும், வைத்தியசாலைகள் கூட அழிக்கப்பட்டு வருவதற்கும் காரணமான குண்டு வீச்சு தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா, இலங்கையை எச்சரித்து இருக்கிறார்.

ஒபாமாவின் இந்த எச்சரிக்கையும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடும் உலகத் தமிழர்களுக்கு ஆறுதல் தருவதாக அமைந்துள்ளது.

சுய நிர்ணய உரிமைக்காகவும், விடுதலைக்காகவும், இலங்கைத் தமிழர்கள் கால் நூற்றாண்டு காலமாக நடத்தி வரும் போராட்டம் இப்போது முதல் முறையாக உலகத்தின் கவனத்தை ஈர்த்து வருகிறது என்பதை அமெரிக்க ஜனாதிபதியின் தலையீடும் அவரது எச்சரிக்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய நிலையில், இலங்கையில் போர் நிறுத்தம் வந்துவிட்டது என்று இந்தியாவின் ஆட்சியாளர்கள் சொல்லிக் கொண்டிருக்காமல், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் இணைந்து இலங்கை இனப் பிரச்சினையையும், இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளையும், அதன் போர்க் குற்றங்களையும் உலக நாடுகள் அவைக்கு எடுத்துச் சென்று விவாதிக்கவும், அதன் மூலம், இலங்கை அரசைத் தண்டிக்கவும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் போர் நிறுத்தப்படாவிட்டால், அங்கே மிகப்பெரிய மனிதப் பேரழிவு ஏற்படும் என்ற உண்மையை அமெரிக்கா உணர்ந்து கொண்ட அளவுக்கு இந்தியா உணர்ந்து கொள்ளவில்லையே என்கிற வேதனை ஒருபுறம் இருந்தாலும், இலங்கைத் தமிழர்களைக் காக்கும் பிரச்சினையில் உண்மையான ஆர்வமும், அக்கறையும் கொண்ட புதிய அரசு டில்லியில் அமையும் என்ற நம்பிக்கையோடு அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கையையும், அமெரிக்காவின் தலையீட்டையும் தமிழர்கள் அனைவரும் வரவேற்போம், பாராட்டுவோம் - என்றுள்ளது.

# அ.தி.மு.கவின் ஆதரவைப் பெற பா.ஜ.கவினர் கடும் பிரயத்தனம்!

மத்தியில் ஆட்சியமைக்க அ.தி.மு.கவின் ஆதரவைப் பெற பாரதிய ஜனதாக் கட்சித் தலைமை தீவிரமாக முயற்சித்து வருகிறது.

கட்சியின் உயர்நிலைத் தலைவர்கள் டில்லியில் வியாழக்கிழமை கூடினர். அத்வானி வீட்டில் அவரது தலைமையில் இந்தக்கூட்டம் நடந்தது. கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங், குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி, அத்வானியின் அரசியல் ஆலோசகர் சுதீந்திர குல்கர்னி, கட்சியின் பத்திரிகைத் தொடர்பாளர்கள் ரவிசங்கர் பிரசாத், சுதேசி ஜாக்ரண் மஞ்ச் தலைவர் எஸ்.குருமூர்த்தி உட்பட முக்கிய தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னால் செய்தியாளர்கள் நரேந்திர மோடியைச் சந்தித்து, எதற்காக டில்லிக்கு வந்தீர்கள் என்று கேட்டபோது -

மக்களவை பொதுத்தேர்தலின் அனைத்து கட்டங்களும் முடிந்துவிட்டன; இனி அடுத்து ஆட்சி அமைக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கத்தான் இந்தக் கூட்டம். இதில் மூடுமந்திரம் ஏதும் இல்லை. இப்போது எங்களுக்கு உள்ள ஆதரவு, இனி பெறக் கூடிய ஆதரவு, அதற்காக எடுக்க வேண்டிய முயற்சிகள் ஆகியவற்றைப் பற்றி விவாதித்து முடிவு செய்யத்தான் இந்தக்கூட்டம் - என்று மோடி அதற்குப் பதிலளித்தார்.

சுதேசி ஜாக்ரண் மஞ்ச் அமைப்பாளரும் சென்னையைச் சேர்ந்தவருமான எஸ்.குருமூர்த்தி இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் அ.தி.மு.க. தலைமையிலான அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

தேர்தல் நேர்மையாக நடந்தால் எங்கள் கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று ஜெயலலிதாவே கூறியிருக்கிறார். எனவே, அந்த அணியின் ஆதரவைப் பெற பா.ஜ.க. விரும்புகிறது. அதற்கான ஆலோசனைகளைப் பெறவே குருமூர்த்தி அழைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

வாஜ்பாய் பிரதமராவதற்கு அ.தி.மு.க. தான் முன்னர் ஆதரவு அளித்தது. தமிழ்நாட்டில் பா.ஜ.கவுடன் முதலில் கூட்டணி வைத்தது அ.தி.மு. க.தான். அயோத்தியில் ராமருக்குக் கோயில், கர சேவை, ராமர் பாலம் ஆகியவற்றில் ஜெயலலிதாவின் கருத்துகள் இந்துக்களுக்கு ஆதரவாக இருப்பதால், சித்தாந்த ரீதியில் தங்களுடன் நெருக்கமாக இருப்பவர் ஜெயலலிதா என்ற கருத்து சங்கப் பரிவாரங்களுக்கு எப்போதுமே உண்டு.

எனவே அவரது ஆதரவைப் பெற பா.ஜ.க. விரும்புகிறது. தமிழ்நாட்டில் சட்டப் பேரவையில் தி.மு.க. அரசுக்குப் பெரும்பான்மை வலு கிடையாது. எனவே, இந்த நேரத்தில் தி.மு.கவால் காங்கிரஸ் கூட்டணியைவிட்டுச் செல்ல முடியாது. அதேசமயம் அ.தி.மு.கவின் ஆதரவைப் பெற வேண்டும் என்று காங்கிரஸ் தலைமை நினைத்தால் அதற்கு விலையாக, தி.மு.க. அரசுக்கு அளித்து வரும் ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை அ.தி.மு.க. தரப்பிலிருந்து வைக்கப்படலாம்.

அதை காங்கிரஸ் ஏற்றால் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி சாத்தியம். ஆனால் தி.மு.கவுடனான கூட்டணியே தொடர்கிறது என்று காங்கிரஸ் தலைமை அறிவித்துவிட்டதால், இப்போதைக்கு மூன்றாவது அணியில் இருக்கும் ஜெயலலிதாவின் ஆதரவைப் பெற பாரதிய ஜனதா கட்சி முயல்கிறது.

# டில்லியில் சொல்லி அடிப்பது யார்?

# இன்று வாக்குகள் எண்ணும் பணி; பி.ப. 2 மணிக்குள் முடிவு தெரியும்

சென்னை, மே 16

இந்தியா முழுவதும் மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி, இன்று காலை 8 மணிக்கு தொடங்குகிறது. 10 மணியளவில் முடிவுகள் வெளிவரும். தமிழகத்தில் நாகை தொகுதிக்கான முடிவு முதலில் தெரியும்.

மக்களவைக்கு 543 தொகுதிகளுக்கான தேர்தல் இந்தியா முழுவதும் 5 கட்டங்களாக நடந்தன. கடைசி மற்றும் 5ஆவது கட்டத் தேர்தல் தமிழகம், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் 86 தொகுதிகளில் கடந்த 13ஆம் திகதி நடந்தது. தேர்தலில் தமிழகத்தில், 72.46 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஒரு மக்களவைத் தொகுதியில் 6 சட்டப் பேரவைத் தொகுதிகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பேரவைத் தொகுதிகளின் வாக்குகளை எண்ண 14 மேசைகள் அமைக்கப்படுகின்றன. மேசைக்கு இருவர் வீதம் 28 பேர் வாக்குகளை எண்ணுவார்கள்.

ஒரு மக்களவைத் தொகுதிக்கு 91 பேர் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுகின்றனர். இதுமுழுக்க வீடியோ கமரா மூலம் பதிவு செய்யப்படுகிறது.

தமிழகத்தில் நாகை தொகுதியில்தான் மிகக் குறைந்தளவில் 7 பேர் போட்டியிடுகிறார்கள். எனவே, இந்தத் தொகுதியின் முடிவு முதலில் வெளியாகும் என்று தெரிகிறது. இதைத் தொடர்ந்து குறைந்த எண்ணிக்கையில் வேட்பாளர்கள் களத்தில் உள்ள தென்காசி (9), கடலூர் (11), மதுரை (12), சிதம்பரம், தஞ்சை, ஆரணி (தலா 13) ஆகிய தொகுதிகளின் முடிவுகள் பகல் 10 மணிக்குள் தெரியவரும்.

அதிகபட்சமாக தென்சென்னையில் 43 பேர் போட்டியிடுவதால் இதன் முடிவு சற்று தாமதமாகும். மொத்தத் தொகுதிகளின் முடிவுகள் பகல் 2 மணிக்குள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈழத் தமிழருக்கு சிறப்பு வைத்திய முகாம்: தமிழகத்தில் நடத்த அனுமதிக்க வேண்டும்

## கருணாநிதியிடம் செஞ்சிலுவை சங்கத்தினர் கோரிக்கை

சென்னை, மே 16

இலங்கையில் காயமடைந்த தமிழீழ மக்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்க தமிழகத்தில் சிறப்பு முகாம் நடத்த அனுமதிக்க வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதிக்கு செஞ்சிலுவைச் சங்க செயலாளர் ஜி.ராஜமகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

போரில் காயப்பட்டு பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக 1863ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது செஞ்சிலுவைச் சங்கம். இப்போது இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களே உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களை தமிழகத்திற்கு அழைத்து வந்து அவர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்க முயல வேண்டும். இவர்களுக்கு மருத்துவ உதவி செய்ய இங்கு வைத்தியர்கள் தயாராக உள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஒரு சிறப்பு வைத்திய முகாமை சென்னை அல்லது தஞ்சாவூரில் அமைக்க அனுமதிக்க வேண்டும் - என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோரிக்கைக் கடிதத்தின் நகலை பிரதமர், குடியரசுத் தலைவருக்கும் அனுப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியச் செய்திகள்

# ஜெயலலிதாவின் ஆதரவு கிடைத்தால் மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும்

## தெலுங்கானா கட்சித் தலைவர் தெரிவிப்பு

ஐதராபாத், மே 16

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா வின் ஆதரவு கிடைத்தால் மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் - என்று தெலுங்கானா ராஷ்ட் ரீய சமிதி கட்சி தலைவரும் முன்னாள் அமைச் சருமான கே.சந்திரசேகரராவ் தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்ற ஒரு லட்சியத்திற்காக உருவாக் கப்பட்டதுதான் தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சி. எங்கள் லட்சியத்தை நிறைவேற்ற எந்தக் கட்சி உதவுகிறதோ அதை ஆதரிப்போம்.

பா.ஜ.க. தலைவர்கள் கூறும்போது, மத்தி யில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த 100 நாளில் தெலுங்கானா தனி மாநிலம், அமைப்போம் என்று உறுதி அளித்துள்ளனர்.

இதனால்தான் நான் பா.ஜ.கவை ஆதரிக்க முடிவு செய்தேன். இதை சிலர் விமர்சனம் செய் கிறார்கள். அதை நாங்கள் கண்டு கொள்ளவில்லை.

கடந்த தேர்தலில் தெலுங்கானா மாநிலம் அமைப்போம் என்று காங்கிரஸ் உறுதி அளித்த தால்தான் நாங்கள் அக்கட்சியுடன் கூட்டணி அமைத்தோம். ஆனால் மத்தியில் ஆட்சியைப் பிடித்ததும் தனி மாநிலம் தர மறுத்துவிட்டது. அதனால்தான் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகினோம்.

இந்தத் தேர்தலில் மத்தியில் பா.ஜ.க. கூட்ட ணிக்கு அதிக இடங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா ஆதரவு கிடைத்தால் பா.ஜ.க. மத்தியில் ஆட்சி அமைக்கும். எனவே, அவரது ஆதரவைப் பெற தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது - என்றார்.

# காங்., பா.ஜ.க. ஆட்சி அமைக்க நாங்கள் ஆதரவளிக்க மாட்டோம்

## கம்யூனிஸ்ட் உறுதி

காங்கிரஸ் ஆட்சியமைக்க நாங்கள் ஆதரவு அளிக்கமாட்டோம். அதுபோல் பா.ஜ.க. ஆட்சியமைக்கவும் இடம் தரமாட்டோம் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் தேசிய செயலர் டி.ராஜா தெரிவித்தார்.

காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு மாற்றாக மூன்றாவது அணி ஆட்சியமைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

டில்லியில் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார். மலும் அவர் கூறியவை வருமாறு -

காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவுக்கு மாற்றாக மத்தியில் ஆட்சி அமைக்க ஆதரவு தருமாறு கோரி இந்தத் தேர்தலில் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். எங்களது கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு அளித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். வரும் 16 ஆம் திகதி இது தெரிந்துவிடும் - என்றார்.

மூன்றாவது அணி சிறப்பான வெற்றி பெற்று புதிய ஆட்சியில் முக்கிய பங்கு வகிக்கும். தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் புதிய அணி உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் மூன்றாவது அணியில் புதிய கட்சிகள் வந்து இணையும். எந்தக் கட்சி மூன்றாவது அணியில் வந்து சேரும் என்பதை இப்போது சொல்ல முடியாது - என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம்: 19.06.1955
மறைவு: 18.04.2009

அமரர்
**சோமசுந்தரம் பாலேந்திரன்**

உங்களோடு வாழ்ந்த நாள்களை எண்ணும்போது
இறக்கின்றது இதயம்! உணர்கின்றோம் வெறுமையை
உங்களைப் பிரிந்த நாள் முதல்
வருடங்கள் எத்தனை ஆனாலும் மறக்க மாட்டோம்
உங்களை எம் வாழ்வில்

கடந்த 18.04.2009 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 17.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரண நிகழ்விலும் மதிய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*ஐயனார் கலட்டி,*
*பருத்தித்துறை.*

குடும்பத்தினர்.


## சாரிகா லேணர்ஸ்

எமது நிறுவனத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக பயிற்சியை மேற்கொண்ட அனைவருக்குமான எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சைகளுக்குமான திகதிகளை 18.05.2009 காலை 8.30 இற்கு பெற்றுக்கொள்ளவும். இது தங்களின் இறுதிச் சந்தர்ப்பம் ஆகும்.

A.கிருபா - 0777225292
0 21 2228059

புதிய நடைமுறையிலான சாரதி அனுமதிப் பத்திரம் பெறுபவர்கள் இன்று தொடக்கம் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இல. 38, கந்தப்புசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்,
(H.N.B க்கு பின்னால்)


## சமயசந்நிதிகளில்

நல்லூர், மே 16

கோப்பாய் தெற்கு வீரமாகாளி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழாவின் 13 ஆம் திருவிழாவானபுதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை9 மணிக்கு நடைபெறும். மறுநாள்வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204-111)

* * *

சுழிபுரம், மே 16

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் வைரவப்பெருமானுக்கு பொங்கல் விளக்கேற்றும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு பொங்கல் நிகழ்வும் நடைபெறும். (204-28)

## உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்.பிரதேச செயலகப்பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தில் இருந்து மாதாந்தம் 500 ரூபா வீதப்படி இரண்டு ஆண்டுகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த மாணவர்கள் கடந்த வருடம் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் தமிழ்மொழி கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தி உட்பட தேவையான அடிப்படைத் தகைமைகளுடன் சித்தியெய்தியவராக இருக்கவேண்டும்.

இந்தப் புலமைப்பரிசிலுக்குத் தகுதியானவர்கள் தத்தமது பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் அல்லது உரிய சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் உரிய விண்ணப்பப் படிவத்தைப்பெற்று, பூர்த்தி செய்த படிவங்களை உரிய பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பு தமக்குரிய சமுர்த்தி வங்கிச் சங்கத்திலோ அல்லது யாழ். பிரதேச செயலக சமுர்த்திக் கிளையிலோ ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, மே16

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையே நடத்தி வரும் 17 வயதுப் பிரிவுகளுக்கான 50 ஒவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் நெல்லியடி மகாவித்தியாலயம் அணி (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

* சென்ஜோன்ஸ் கல்லூரி பி அணி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அணி (சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம்).

* யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (1-86)

* * *

யாழ்ப்பாணம், மே 16

யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில்நடைபெற்று வரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில்இன்று பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.ஸ்ரார் வி.கவும் [illegible] மோதுகின்றன.


தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

## இலிகிதர் பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத்திட்டம் 9450 - 11000 / 75X10-80X10 (கூ.வே.ஆ.சு.நிருபம் 66/2006 இன் படி)
02. சம்பளக் குறியீட்டு இல. 302/15
03. வயது:- 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
04. விண்ணப்ப முடிவு திகதி: 27.05.2009
05. பிணை: தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் காசுப் பிணையினை செலுத்துவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.
06. 1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கத்தில் ரூபா 20/= செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
3. கணனி அறிவும், திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. மேலதிக விவரங்களைச் சங்கப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.
07. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-
அ. கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் (108/81 சுற்று நிருபத்திற்கமைய) இலிகிதர் பதவியில் இரண்டு வருடத்துக்கு குறையாத அனுபவம்
அல்லது
ஆ. க.பொ.த.(சாதாரண தரத்தில்) கணிதம்/வர்த்தக எண்கணிதம்/எண் கணிதம், சிங்களம்/தமிழ் பாஷை உட்பட 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும், கூட்டுறவுச் சங்க இலிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம்.
08. நிபந்தனைகள்:-
அ. நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
ஆ. விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி என்பன இணைக்கப்பட வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும், சான்றிதழ்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமை உண்டு.
09. விண்ணப்பப்படிவங்கள் யாவும், "பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் (வ.து)கொடிகாமம்." என்ற முகவரிக்கு இலிகிதர் 302/15 பதவிக்கான விண்ணப்பம் எனக் குறித்த உறையின் இடது பக்கமேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

குறிப்பு:-
1. 06.05.2008 திகதிய விளம்பரம் கூடிய தகைமையில் மேற்கொள்ளப்பட்ட [illegible] கொண்டு திருத்தத்துடன் மீள் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
2. 07.05.2008 ஆம் திகதிய உதயன் நாளிதழின்படி இப்பதவி தொடர்பாக விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஆயினும் இவர்கள் குறித்த பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு மேற்படி விளம்பரத்தின்படி தகைமையிருப்பின் அழைக்கப்படுவர்.
3. இப்பதவிக்கு முன்னர் விண்ணப்பிக்காதவர்கள் 27.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம். பொதுமுகாமையாளர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கிருஷ்ணானந்தியின் அன்புக் கணவர்
**திரு.சுப்பிரமணியம் செல்வராஜன்**
அவர்களது மரணத்தால் துயரடைந் திருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/இராமநாதன் கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை பாலசுப்பிரமணியம்
(ஊழியர், சின்னத்துரை அன் பிறதர்ஸ், யாழ்ப்பாணம்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பாலசுப்பிரமணியம் நேற்று(15.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சத்தியபாமாவின் அன்புக் கணவரும், சத்தியசீலன், சத்தியகலா, சத்தியகாந்தன் (யுனிக் வீடியோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், மௌலிஸ்பரன்(லக்கி வீடியோ), அருந்ததி, கதிவாணி ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி, கஜராம், லக்ஷாயினி, சங்கீர்த், விதுர்ஜியன், ஹருனி, ஹரிஸ், ஹம்சத் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை, குமாரகுலசிங்கம், மற்றும் அருளானந்தம், பரமானந்தம், புஸ்பநீலா, மங்களேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரட்ணம், இராஜவரோதயம், யோகம்மா, சாவித்திரிதேவி, சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(15.05.2009) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு.* தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சங்கரப்பிள்ளை நவமணி



இலக்கணாவத்தை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை நவமணி நேற்று முன்தினம் (14.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. இராமலிங்கம் தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வல்லிபுரம் தம்பதியினரின் அன்பு மருமகளும், சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கணேசராசா, ரஞ்சிதமலர், செல்வராஜா, இரத்தினராஜா, சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுசிலாராணி, கற்பகஈஸ்வரன், புவனேஸ்வரன், திரியோகேஸ்வரன், சந்திரசேகரன், தயாநிதி, ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகேஸ்வரன், கணேஸ்வரி, சத்தியபாமா, லீலாவதி, ரமணி, வைகுந்தநேசன் ஆகியோரின் மாமியாரும், கார்த்திகா, ஜெனார்த்தன், உஷானா, கர்ஷனா, கௌதாரன், கௌசிகா, கௌசிகன், சிந்துயா, விபுஷன், தர்சனா, இரட்சகன், மதுரா, மதுவந்தி, மதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2009) ஞாயிற்றுக்கிழமை பிலக்கடை, கரவெட்டி மத்தி, கரவெட்டி எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10 மணியளவில் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிலக்கடை,*
*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி தில்லைநாயகி குமாரசாமி



நல்லூர் வடக்கு, ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி குமாரசாமி தில்லைநாயகி 13.05.2009 புதன்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்- பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் நகுலராசா - கௌரி அம்மாவின் மருமகளும் ஜெயக்குமார் (டென்மார்க்), அமரர் திலீப்குமார் மற்றும் சந்திரகுமார் (ஜேர்மனி), அஞ்ஜனா (ஹொலண்ட்), றஞ்சிதா (ஜேர்மனி), அமரர் சாந்தா ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் செல்லச்சாமி (முன்னாள் லிகிதர், துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம்) மற்றும் திருமதி தவமணி தவகணேசன் (ஹொலண்ட்), இராசதுரை (H.P.T/J.M.C), இராஜரட்ணம் (L.L.B சட்டத்தரணி), திருமதி புஸ்பமணி மயில்வாகனம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றஞ்ஜனாதேவி (டென்மார்க்), ராமகிருஷ்ணன் (ஹொலண்ட்), தெய்வேந்திரம் (ஜேர்மனி), திருமதி விஜயகுமாரி (U.K), சாந்தி (இந்தியா) ஆகியோரின் மாமியும் கதாதரன், சத்திய தர்ஷினி, சுஜீவன், சஞ்ஜீவ், ஜான்ஸி, சாயி சங்கீத், சாயிகீதா, சாஜிபிரசாத், சாயீஸ், மீரா ஆகியோ ரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (20.05.2009) ஹொலண்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.55, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
அ.இராசதுரை (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப் அணி அபாரமான ஆட்டம்; டெல்லியை 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது

பிளம்பென்ரைன், மே 16

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நேற்றிரவு நடைபெற்ற 46ஆவது ஆட்டத்தில் டெல்லி டேர் டெவில்ஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது கிங்ஸ் லெவன் பஞ்சாப்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஷேவாக் தலைமையிலான டெல்லி டேர் டெவில்ஸ் அணியும் யுவராஜ்சிங் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த டெல்லி டேர் டெவில்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர்களான கம்பீர், ஷேவாக் ஆகியோர் சரியான ஆரம்பத்தை வழங்கவில்லை. ஷேவாக் 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரட்லியின் வேகத்தில் விக்கெட் காப்பாளர் சங்ககாரவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். கம்பீர் 8 ஓட்டங்களைப் பெற்று மீண்டும் ஓட்டம் ஒன்றைப் பெற எத்தனித்த போது சங்ககாரவினால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப் பட்டார்.

அடுத்துவந்த டில்சான், ஏ.பீ.டி. வில்லியர்ஸ் ஆகியோரும் இம்முறை சோபிக்கத் தவறினர். டில்சான்(10), வில்லியர்ஸ் (11) இருவருமே ஸ்ரீசந்தின் பந்தில் யுவராஜ் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர். இந்த நிலையில் 9.1 ஓவர்கள் நிறைவில்



51 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிக் கொண்டிருந்தது டெல்லி அணி.

இந்த நிலையில் ஜோடி சேர்ந்த மங்காஷ், டினேஸ் கார்த்திக் ஜோடி 5 ஆவது விக்கெட் இழப்புக்காக 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். மங்காஷ் 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க டினேஸ் கார்த்திக் 29 பந்துகளை எதிர்கொண்டு 32 ஓட்டங்களைப் பெற்று பதானின் பந்தில் மோற்றாவிடம் பிடி கொடுத்து பெவிலியன் திரும்பினார். மஹறூப்(3), டானியல் விற்றோரி (1), வஹ்ரியா ஓட்டம் எதையும் பெறாமல் பிரட்லீயின் வேகத்தில் வெளியேறினார். சங்வான் 5 ஓட்டங்களுடனும் நெஹ்ரா ஒரு ஓட்டத்துடனும் களத்தில் இருந்த போது 20 ஓவர்களும் நிறைவுபெற்றன.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் சார்பில் பந்து வீசிய பிரட்லீ 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் பதான், ஸ்ரீசந்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மோற்றா ஒரு விக்கெட்டினையும் கைப்பற் றினர்.

121 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணியின் ஹற்றிச் அதிரடியாக 10 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க சொஹல் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பொமேர்ஸ்வச் (9), யுவராஜ் சிங் (18) என ஆட்டமிழக்க பொறுப் புணர்ந்து ஆடிய சங்கக்கார ஆட்டமிழக்காது 6 பௌண்டறிகளுடன் 43 ஓட்டங்களைப் பெற்று பஞ்சாப் அணியின் வெற்றியை உறுதிசெய்தார். அவருக்குப் பக்க பலமாக இருந்த இர்பான் பதான் 3 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றார்.

18.4 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கனியை தனதாக்கியது.

டெல்லி சார்பில் பந்து வீசிய மஹறூப் 2 விக்கெட்டுக்களையும் நெஹ்ரா, சங்வான் தலா ஒரு விக்கெட்டினையும் கைப் பற்றினர். (06)

## ஐ.பி.எல். ருவென்ரி-20 இன்றைய ஆட்டங்கள்

**முதலாவது ஆட்டம்**

அணிகள் : சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ்
மைதானம் : போர்த் எலிசபெத்
நேரம் : மாலை 4 மணி

**இரண்டாவது ஆட்டம்**

அணிகள் : டெக்கான் சார்ஜர்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
மைதானம் : ஜெகன்னஸ் பேர்க்
நேரம் : இரவு 8 மணி

# இந்திய-மேற்கிந்திய போட்டி அட்டவணை அறிவிப்பு

புதுடில்லி, மே 16

இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் நான்கு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் அடுத்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது. இதற்கான இந்திய அணி வீரர்கள் அடுத்த மாதம் இங்கிலாந்தில் நடக்கவிருக்கும் ஐ.சி.சி. 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடருக்குப் பிறகு மேற்கிந்தியத்தீவுகள் செல்ல உள்ளனர். இவ்விரு அணிகளுக்மிடையிலான நான்கு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் முதல் இரண்டு போட்டிகள் முறையே அடுத்த மாதம் 26 மற்றும் 28ஆம் திகதிகளில் கிங்ஸ் டனில் நடக்கவுள்ளன. 3 ஆவது மற்றும் 4ஆவது போட்டி முறையே ஜூலை மாதம் 3 மற்றும் 5ஆம் திகதிகளில் செயின்ட் லூசியா வில் நடக்க உள்ளது.

# ஆசியக் கிண்ண ஹொக்கித் தொடரில் பங்களாதேஷை வீழ்த்தியது இந்தியா

## 11 கோல்கள் அடித்து அசத்தல்

கௌன்டன், மே 16

ஆசியக் கிண்ண ஹொக்கித் தொடரில் இந்திய அணி, பங்களாதேஷை 11-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆசியக் கிண்ண ஹொக்கி தொடர் மலேசியாவில் உள்ள கௌன்டனில் நடந்து வருகிறது. லீக் சுற்றில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது. இதனால் 7ஆவது இடத்திற்காக நேற்றுமுன் தினம் நடந்துமுடிந்த போட்டி ஒன்றில் பங்களாதேஷ் அணியை சந்தித்தது. ஆரம்பம் முதல் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணிக்கு அணித்தலைவர் சந்தீப் சிங், 10ஆவது மற்றும் 13ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்புகளை கோலாக மாற்றினார். இவரைத் தொடர்ந்து இந்திய வீரர் ஹரி பிரசாத் 34ஆவது நிமிடத்தில் ஒரு கோலடிக்க, இந்திய அணி முதல் பாதியில் 3-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் தொடர்ந்து அசத்திய இந்திய அணிக்கு அர்ஜுன் ஹலாப்பா 39ஆவது நிமிடத்தில் கோலடித்தார். இவரைத் தொடர்ந்து இந்திய வீரர் ரகுநாத் 43ஆவது நிமிடத்தில் கோலடிக்க இந்திய அணி 5-0 என முன்னிலை வகித்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியாவின் சுனில் (48ஆவது, 57ஆவது நிமிடம்) இரண்டு கோலடித்து நம்பிக்கை தந்தார். 65ஆவது நிமிடத்தில் இந்திய வீரர் ராஜ்போல் சிங் தன் பங்கிற்கு ஒரு கோலடித்தார். பின்னர் இந்திய வீரர்களான சர்தாரா சிங் (66ஆவது, 69ஆவது), ஆகியோரும் பரப்ஜோத் சிங் (67ஆவது) அடுத்தடுத்து கோல் மழை பொழிய இந்திய அணி ஆட்டநேர முடிவில் 11-1 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

## ஐ.பி.எல். அணிகளின் தற்போதைய நிலை

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமனிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| டெல்லி டேர்டெவில்ஸ் | 11 | 8 | 3 | 0 | 16 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 11 | 6 | 4 | 1 | 13 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 6 | 5 | 1 | 13 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 11 | 6 | 5 | 0 | 12 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 12 | 6 | 6 | 0 | 12 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 5 | 6 | 1 | 11 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 1 | 9 | 1 | 03 |

# நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு நடமாடும் வைத்திய சேவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 16

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வைத்திய சேவை வழங்க நடமாடும் மருத்துவ சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான நடமாடும் மருத்துவ சேவையினை யாழ்.மாவட்டச் சுகாதாரத் திணைக்களம் வழங்கி வருகின்றது.

இதற்கென நலன்புரி நிலையங்களின் அருகாமையில் உள்ள வைத்திய நிலையங்களில் இருந்து மருத்துவக்குழுக்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இந்த நடமாடும் மருத்துவ சேவைக்கான மருந்துப் பொருள்களை சுகாதாரத் திணைக் களமும் பல பொது நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. சர்வதேச மருத்துவ சுகாதாரக் கழகம், உலக சுகாதார ஸ்தாபனம் போரூட் (FORUT) நிறுவனம், சிவபூமி அறக்கட்டளை ஆகியன தென்மராட்சி, கோப்பாய் பிரதேச நலன்புரி நிலையங்களுக்கான மருந்துப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய நலன்புரி நிலையங்களுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்கான மருத்துவப் பொருள்களை நெல்லியடி வர்த்தக சங்கம், கரவை அபிவிருத்தி ஒன்றியம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிச் சமூகம் ஆகியவை அன்பளிப்புச் செய்துள்ளன. இன்றைய அவசர சூழ்நிலையில் எமக்கு அபயக்கரம் நீட்டிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

நலன்புரி நிலையங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கான சுகாதாரம், போசாக்கு சம்பந்தமான விடயங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பை சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மருத்துவ சேவை, சுகாதாரம், போசாக்கு போன்ற விடயங்களுக்கு உதவி செய்ய விரும்பும் நிறுவனங்களை சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (1)

# சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சையில் சித்தியடையாதோருக்கு மீள்பரீட்சை

யாழ்ப்பாணம்,மே.16

பழைய நடைமுறையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக கடந்த ஒரு வருட காலத்திற்குள் விண்ணப்பப்படிவங்களை யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சமர்ப்பித்து பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கு வீதி ஒழுங்கு விதிகள் தொடர்பான மீள் எழுத்து மற்றும் செயன்முறைப்பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

எனவே மேற்குறித்த பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி பரீட்சைத் திகதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் இப்பரீட்சைக்குத் தோற்றத்தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் இரத்துச் செய்யப்படும் எனவும் யாழ்.மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (203-7)

# நவாலியில் நாளை அன்னையர் தின நிகழ்வு

மானிப்பாய், மே 16

நவாலி- ஊன்றுகோல் அறப்பணியகம் நடத்தும் உலக அன்னையர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நவாலி முருகானந்தா ச.ச.நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் உலக அன்னையர் தின நிகழ்வு இடம் பெறும்.

பிரதம விருந்தினராக நவாலி எச்.எஸ்.சி.எம்.எவ். தலைவரும் வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளருமான செ.ரமேஷ்(ச.நீ) கலந்துகொள்வார்.

அன்றைய தினம் தாயின் மகத்துவத்தை விளக்கும் பாடல் போட்டி-

அன்னையரைக் கௌரவிக்கும் நிகழ்வு, போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன.

# வருந்துகிறோம்

யாழ்ப்பாணம், மே 16

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சுப்பிரமணியம் செல்வராசாவின் மரணம் சம்பந்தமாக 14.05.2009 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில்-

காலமானவர் மனைவியுடன் சண்டை பிடித்துக் கொண்டு வீட்டில் இருந்து வெளியேறினார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறு என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவரது மனைவி இது குறித்து அறிவித்திருப்பதாவது:-

காலஞ்சென்றவரை கடந்த ஏழு ஆண்டுகளாகப் பிரிந்து வாழ்கின்றேன். இக் காலப் பகுதியில் நான் அவருடன் எவ்வித தொடர்பும் இன்றி இரண்டு பிள்ளைகளுடனும் எனது தாய், சகோதரர்களுடனும் உடுவில் கிழக்கில் வாழ்ந்து வருகிறேன் - என்றுள்ளது.

காலஞ்சென்றவரின் மனைவிக்கு செய்தியில் வெளியாகிய தகவலால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு வருந்துகின்றோம். (ஆ - ர்)

# வடமராட்சி வலய ஆங்கிலத் தினப் போட்டிகள்

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான வலயமட்ட ஆங்கில தின எழுத்துப் போட்டிகளும், தரம் 12,13 இற்கான கோட்டமட்ட பேச்சுப் போட்டிகளும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அன்றையதினம் நடைபெற விருக்கின்ற தரம் 6 இற்கான ஆங்கில எழுத்தாக்கப் போட்டி நடைபெற மாட்டாது. இப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (1)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை தெய்வேந்திரன் (தெய்வா)

7/8, 1ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தையும் தற்போது கொழும்பு கொட்டாஞ்சேனையையும் வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை தெய்வேந்திரன் நேற்று(15.05.2009) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொ.பே.: 0112 389658

தகவல்: பவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கெதிரான தாக்குதலை தற்போதைக்கு நிறுத்தக் கோரும் அறிக்கை வெளியிடப்படும்

## ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் தகவல்

கொழும்பு, மே 16

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டத் தாக்குதலை தற்போதைக்கு மேற்கொள்ளவேண்டாமெனக் கோரும் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் திங்கட்கிழமை பிறசல்ஸில் இடம்பெறவுள்ள ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்திலேயே இந்த அறிக்கை வெளியிடப்படும் எனவும் அறியமுடிகிறது.

வெளியிடப்படவுள்ள அறிக்கையின் நகல் வடிவம் வருமாறு:-

பொதுமக்களுக்குப் பாரியளவு உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் இறுதிக் கட்ட நடவடிக்கையை இலங்கை அரசு தற்போதைக்கு மேற்கொள்ளக்கூடாது என ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுக்கிறது.

பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக்கூடாது.

பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்படவேண்டும். அத்துடன், தற்போது யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

கடுமையான மோதல்கள் காரணமாக சிறுவர்கள் உட்பட பலர் உயிரிழக்கின்றமை குறித்து வெளியாகும் தகவல்களால் ஐரோப்பிய ஒன்றியம் அதிர்ச்சியடைகிறது.

அத்துடன், மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீன விசாரணையும் அவசியமாகின்றது - என்றுள்ளது. (அ-சி)

### வன்னி மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு விஜயம் மேற்கொண்ட மதிப்பீட்டுக் குழுவொன்று, இலங்கை நிலைவரம் சம்பந்தமாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அரசிடம் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

''இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஊடாக நாங்கள் எங்களது அறிக்கையை வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பித்தோம். இதில் மக்களை மீட்பதற்கும் அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் எவ்வாறு செயற்படலாம் எனப் பட்டியலிட்டிருந்தோம். எனினும், இதில் எதுவும் இன்னமும் செயல் வடிவம்பெறவில்லை" என திமோதி தெரிவித்துள்ளார்.(அ-சி)

### பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட செயலகத்தில் இந்த மாத 4ஆவது கப்பலுக்கான அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொண்டவர்களையும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்ல இருப் பவர்களையும் இன்று காலை 9 மணிக்கு யாழ். ரயில் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (1-7)

### வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிடியில் எஞ்சியுள்ள மக்கள் அடுத்த 48 மணித்தியாலத்திற் குள் விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி உறுதியளித்தார் என அனுஷா பல்பிட்ட தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ள எஞ்சிய கடலோரப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் 1.5 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று நண்பகல் தெரிவித்துள்ளது.

58ஆவது படையணி 1.5 கிலோ மீற்றர் தொலைவிலும் 59ஆவது படையணி 2 கிலோ மீற்றர் தொலைவிலும் நிலைகொண்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் விவரித்தது. (அ)

### செஞ்சிலுவைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மீட்பதற்கும் இந்தப் பகுதி மக்களுக்கான உணவு விநியோகப் பணிகளையும் கடல் வழியாக தம்மால் மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் செஞ்சிலுவைக் குழு கூறியிருக்கின்றது.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் காயமடைந்தவர்களும், நோயாளிகளுமாக 800 பேர் வரையில் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டு உரிய மருத்துவ சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்களாக இருப்பதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு குறிப்பிட்டிருக்கின்றது.

### சூசையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகன் சுரேஷ், மகள் மதி இவர்க ளுடன் அவரது மைத்துனி மற்றும் அவரது மகன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் ஆறு லட்ச ரூபா ரொக்கப்பணமும், ஒரு தொகை தங்க நகைகளும் இருந்ததாகவும் கடற்படை தெரிவித்திருக்கின்றது. (அ-சி)

### ஐ.நாவின் நம்பியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் பிரயாணத்தில் தாமதம் ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா செயலரின் பிரதிநிதி கொழும்பில் உயர்மட்டத் தலைவர்களுடன் இன்று பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கிறார்.

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள 50,000 முதல் 100,000 வரை யிலான பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பாக இவர் தமது பேச்சுக்களின் போது அக்கறை செலுத்துவார் என்று ஐ.நாவின் பேச்சாளர் கோடன்வைஸ் தெரிவித்தார்.

அவர் வவுனியா நலன்புரி நிலையத்துக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்வார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள வன்னி மக்களின் நிலைமை தொடர்பாக நாம் மிகவும் அக்கறை கொள்கிறோம். அவர்களுக்கு உதவ நாம் முற்படுகிறோம்.

ஆனால், அரசு இதற்குத் தடைபோடுகின்றது. வவுனியா அகதிமுகாம்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு உதவும் எதிர்க் கட்சிகளின் உரிமைகள் இந்த அரசால் மறுக்கப்படுகின்றன.

இது பாரிய உரிமை மீறல். இலங்கை அரசு இப்படிச்செய்வதன் மூலம் எதையோ மறைக்க முற்படுகின்றது. எதிர்க்கட்சிகளின் இந்த உரிமையை அரசு பாதுகாக்க வேண்டும்.

பாரிய மனித அவலத்தைத் தவிர்ப்பதற்கு சர்வதேச நாடுகள் முற்படுகின்றன. ஆனால் அரசு அதற்கு இடம் கொடுப்பதில்லை. தமிழ் மக்கள் துருவப்படுவதை நாம் தடுக்க முற்படுகிறோம்.

தமிழரின் இந்தப்பேரவலத்தை அரசியலாக்க வேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார். அரசு இதனைக் கருத்தில் கொண்டு எதிர்கால மனித அவலத்தைத் தடுத்து நிறுத்த முற்பட வேண்டும்- என்றார். (அ-சி)

### ஈழத்தமிழரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு உணவுப் பொருள்களை விமானம் மூலம் விநியோகிக்க இந்திய இராணுவத்தை மத்திய அரசு அனுப்பி வைக்கவேண்டும்.

சமைக்கப்பட்ட உணவு, காய்கறிகள், பழங்கள், தண்ணீர் போத்தல்கள் ஆகியவற்றை அவர்களுக்கு உடனடியாக வழங்கவேண்டும்.

மனிதாபிமான அடிப்படையில் இந்த உதவியை வழங்க மத்திய அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

இந்த உதவி செய்யப்படவில்லை என்றால், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பட்டினியால் உயிரிழக்கும் அபாயம் ஏற்படும். இது போரில் கொல்லப்பட்டவர்களை விட அதிக எண்ணிக்கையில் இருக்கும்.

வைத்தியசாலைகள் மீதும் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது. இதனால், அப்பாவித் தமிழர்கள் உணவு, குடிதண்ணீர் கூட இல்லாமல் அவதிப்படுகின்றனர் - என்றுள்ளது.

### படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாகவும், இதனால், காயமடைந்தவர்கள் பலரும் பராமரிப்பின்றி இருப்பதாகவும் பெரும் அவல நிலை அங்கு ஏற்பட்டிருப்பதாகவும் உறுதிப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் இரு முனைகளில் சண்டையில் ஈடுபட்டுள்ள இரு படையணி கள் இரண்டும் எந்த நேரத்திலும் இணைந்து கொள்ளும். இப்போது விடுதலைப்புலி கள் கடற் பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

வன்னி களநிலைவரம் தொடர்பாக ஏ.பி.செய்தி நிறுவனத்துக்கு நேற்று மாலை தகவல் தெரிவிக்கையில் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கரையோரப் பகுதியில் வடக்கு தெற்கு என இருமுனைகளில் கடும் மோதலில் படையினர் ஈடுபட்டுள்ளனர். இருபடையணிகளுக்கு இடைவெளித் தூரம் 1.1மைல் (1.8கி. மீற்றர்) ஆகும்.

கடும்மோதல்கள் இடம்பெற்ற போதும் படையினர் மெதுமெதுவாகவே முன்னேறுகின்றனர். - என்றார்

வன்னி மக்கள் பாதுகாப்பு வலயம்' மீது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தரை, வான் மற்றும் கடல் வழியான கடுமையான தாக்குதலினை இராணுவத்தினர் தொடங்கினர். தரையில் நான்கு முனைகள் ஊடாகவும், கடல் வழியாகவும் உள்ளே நுழையும் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மிக நெருக்கமான சண்டைகள் பலமுனைகளில் நடைபெறுகின்ற அதேவேளை குண்டுவீச்சில் வான் படையினரும் ஈடுபட்டனர் என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

மிக நெருக்கமான சண்டைகள் நடைபெறுகின்ற சூழலில் - அந்தச் சண்டைகளில் சிறிய ரக தாக்குதல் துப்பாக்கிகள் தவிர பெரும் கனரக ஆயுதங்களைப் பாவிக்கக முடியாத நிலை இருந்தும் - நெடுந்தூர மற்றும் குறுந்தூர கனரக பீரங்கிகள், பல்குழல் வெடிகணை ஏவிகள் கொண்டு தரைப் படையினரும், போர் விமானங்களும் தாக்குதல் நடத்தின என்றும் இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை-

நேற்று மாலை கரையான்முள்ளிவாய்க்கால் பகுதியை இராணுவத்தினர் விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றியிருப்பதாகவும், இந்தப் பகுதியில் விடுதலைப்புலிகள் தடுத்து வைத்திருந்த 1400க்கும் மேற்பட்ட பொதுமக்களை இராணுவத்தினர் மீட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (அ-1)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 05/06/2009
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 06/06/2009
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம்: 250/-
Centre for Information Technology
-Executive Officer



SUBRA 14
(சித்தன்கேணி)
2009/2010
கணித, விஞ்ஞான பிரிவு
Paper Class
16.05 2009
காலை 8.30
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



மருத்துவப் புத்தகங்களுக்கு 20% முதல் 30 % வரையான விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது.
ஆரம்பப் பிரிவு முதல் உயர் கல்வி வரையான சகல புத்தகங்களுக்கும் 10% முதல் 50% வரையான விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது.
ஆசிரியர் திரு.ந.சந்திரகுமார் எழுதிய புத்தகங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது.
உங்கள் விடுமுறை நாள்களை எம்முடன் செலவழியுங்கள்
அனைத்து சலுகைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க புதிய பொலிவுடன் கல்வியுலகில் வலம்வரும்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org